இலவசப் பிரதி
Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

**தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்**

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-729)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 16 (19.04.2003) சனிக்கிழமை இதழ் :198




மூதூரில் நேற்று நடந்த கலவரத்திலிருந்து சில காட்சிகளைப் படங்களில் காணலாம்.



படுகாயமடைந்த தமிழ் இளைஞரொருவரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன், துரைரட்ணசிங்கம் பார்வையிடுகின்றனர்.

## மூதூரில் அமைதிநிலையை ஏற்படுத்த உயர்மட்டக் கூட்டம் நடைபெற்ற

# கட்டைபறிச்சான் படை முகாமுக்கு வெளியே

# மக்கள் மீது கிரனைட் வீச்சு; துப்பாக்கிச் சூடு

## படையினர்–முஸ்லிம் கும்பல் தாக்குதலில் 2 தமிழ் இளைஞர் பலி; 17 பேர் காயம்!

(திருமலையிலிருந்து சசிக்குமார், கீதபொன்கலன்)

**மூதூரில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக, நேற்று கட்டைபறிச்சான் இராணுவ முகாமில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில், தமிழ் - முஸ்லிம் அரசியல் தலைவர்களிடையே உயர்மட்டக் கூட்டம் நடந்துகொண்டிருந்தவேளையிலும், முகாமுக்கு வெளியே வன்முறைகள் நடைபெற்றன. இதில் இரண்டு தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 17 பேர் காயமடைந்தனர்.**

மூதூர் சம்பவம் தொடர்பாக ஆராயும் பொருட்டு - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அமைச்சர்கள் கரு ஜெயசூரிய, ஜோன் அமரதுங்க, மகிந்த சமரசிங்க ஆகியோர் மூதூர், கட்டைபறிச்சான் படைமுகாமுக்கு ஹெலிகொப்ரரில் வந்துசேர்ந்தனர். இவர்களுடன் கூட்டமைப்பின் எம்.பிக்களான இரா. சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம் ஆகியோரும் சென்றிருந்தனர்.

அங்கு வந்த முஸ்லிம் எம்.பிக்களுடன் முத்தரப்புச் சந்திப்பு நடந்து கொண்டிருந்தவேளை - காலை 11 மணியளவில், முகாமுக்கு வெளியெமிக அருகாக குண்டுவீச்சுச் சத்தங்களும் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும் கேட்டன.

தமிழ் - முஸ்லிம் குழுக்களிடையே அங்கு மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் வழங்கிய இரண்டு கைக்குண்டுகளை, முஸ்லிம் இளைஞரொருவர், தமிழ்மக்கள் மீது வீசியபோது அது வெடித்ததில் ஒருவர் பலியானார், 17 பேர் காயமடைந்தனர்.

இதைத்தொடர்ந்து பரவலான துப்பாக்கிச்சூடுகளும் மேற்கொள்ளப்பட்டன. தப்பியோடிய தமிழ்மக்கள் மீது படையினர் சரமாரியாகச் சுட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



குழப்பிறதுக்கும் குழப்ப வைக்கிறதுக்கும் ஆக்கள் இருக்கேக்க என்னதான் நடக்காது...?

## மூதூர் சம்பவங்கள் குறித்து கண்காணிப்புக்குழு விசாரணை

மூதூரில் பதற்றநிலைக்கு வழிகோலிய சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆயத்தமாகி வருவதாகக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக, விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்வதற்குத் திட்டமிட்டு வருவதாகவும் குழுவின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

மூதூர் சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்ட பிரதிநிதிகள், மூதூரில் 20 நிமிடங்கள் முஸ்லிம் கும்பலொன்றினால் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீம் வெளியேற மஹ்ரூப் கோரிக்கை

பாலத்தோப்பூர் பகுதியிலிருந்து அமைச்சர் ஹக்கீமின் ஏற்பாட்டில் இரண்டு பஸ்களில் வந்த முஸ்லிம் கும்பல், தமிழர் எதிர்ப்புக் கோஷங்களையும் அரச எதிர்ப்புக் கோஷங்களையும் எழுப்பியதாக, ஐ.தே.க. எம்.பி. மஹ்ரூப் குற்றஞ்சாட்டியுள்ளார். மல்லிகைத்தீவில் வைத்து இக்கும்பல் எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பியதாகவும், ஹக்கீம் மூதூரை விட்டு வெளியேறுவதே அமைதி திரும்ப ஒரே வழி எனவும் மஹ்ரூப் தெரிவித்தார். (10)

## இந்தியத் தூதுவரை ஹக்கீம் சந்தித்தார்!

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், அண்மையில் இந்தியத்தூதுவர் நிருபம் சென்னைச் சந்தித்து உரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற இச்சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலவரம் உட்படப் பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

## கட்டைபறிச்சான் தாக்குதலில் பலியானோர், காயமடைந்தோர்

(திருமலை)

மூதூர் - கட்டைபறிச்சான் இராணுவ முகாமுக்கு முன்னால் நேற்று மதியம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலும் கொல்லப்பட்டவர்கள் விபரம் வருமாறு -

- மகேஸ்வரன் ஜெயசங்கர் - வயது 24, சம்பூர்.
- தர்மலிங்கம் கமலராசன் - வயது 25, சம்பூர்.

படுகாயமடைந்து கண்டி வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக இடமாற்றப்பட்டவர்.

- மாணிக்கராசா ரமணன் - வயது 21, கடற்கரைச்சேனை.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர்.

- கதிர்காமத்தம்பி சந்திரமோகன் - வயது 24, சம்பூர்.
- கணபதிப்பிள்ளை லிங்கேஸ்வரன் - வயது 30, சம்பூர்.
- அரசரட்ணம் குகராஜா - வயது 28, கடற்கரைச்சேனை.
- குருகுலசிங்கம் உதயசங்கர்- வயது 20, கடற்கரைச்சேனை.
- சாமிநாதன் பரமானந்தன் - வயது 20, சம்பூர்.
- சிவஞானசுந்தரம் விஜயசேகர் - வயது 22, கட்டைபறிச்சான்.

காயங்களுக்குள்ளாகி சம்பூர் வைத்தியாசலையில் சிகிச்சை பெற்றோர் -

(10 ஆம் பக்கம் பார்க்க)




வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட படுகாயமடைந்த தமிழ் இளைஞர்கள்.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# மீள்குடியேறிய முஸ்லிம்களுக்கு உதவிப்பொருட்களை சவுதி வழங்கியது




நேற்றைய தினம் யாழ். புதிய பள்ளிவாசலில் நடைபெற்ற - உதவிப்பொருட்கள் வழங்கும் நிகழ்விற்கு வருகை தந்த சவுதியைச் சேர்ந்த ஐ.ஐ.ஆர்.ஓ. அமைப்பின் அதிகாரிகளைப் படத்தில் காணலாம்.

சவுதி அரேபிய அரசாங்கத்தின் சர்வதேச இஸ்லாமிய நிவாரண அமைப்பினால், யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களுக்கான உலர் உணவு மற்றும் உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டன.

நேற்றையதினம் யாழ். புதிய பள்ளிவாசலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சர்வதேச இஸ்லாமிய நிவாரண அமைப்பின் பணிப்பாளர் சுலைமான் அல் சககரி-முஸ்லிம் மாணவர்களுக்கான ஒரு தொகுதி பர்தா துணிகள், பாடசாலைப் புத்தகப்பைகள், 85 குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணம் என்பவற்றை வழங்கினார்.

அகில இலங்கை உலமா சபையைச் சேர்ந்த மௌலவி எம்.எம்.ஏ. முபாரக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் - சர்வதேச இஸ்லாமிய நிவாரண அமைப்பின் பொது சன விவகாரங்களுக்கான பொறுப்பாளர் யூசுப் அல் சல்லோம், இலங்கையின் இஸ்லாமிய நிவாரண அமைப்பின் பணிப்பாளர் நௌபர், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். முஸ்லிம் அமைப்பின தலைவர் முபீன், புதிய பள்ளிவாசல் மௌலவி அப்துல் கபூர் முகம்மத் இர்பான் மற்றும் கிராம சேவையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (சு)

# யாழ். முஸ்லிம்களை மீளக்குடியமர அரச அதிபர் அழைப்பு விடுத்தார்

## உதவிகள் வழங்கவும் தயார் என அறிவிப்பு



நிகழ்வில் கலந்துகொள்ள வருகை தந்திருந்த யாழ். அரசாங்க அதிபரை சவுதியைச் சேர்ந்த அதிகாரிகள் வரவேற்கின்றனர்.

புலம்பெயர்ந்து வேறிடங்களில் வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்கள், மீண்டும் இங்கு வரவேண்டுமென - யாழ். அரசாங்க அதிபர் நேற்று அழைப்பு விடுத்தார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற புலம்பெயர்வுகளில், தமது இடங்களை விட்டு வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்ற யாழ். முஸ்லிம்கள் அனைவரையும், யாழ்ப்பாணம் திரும்பி வந்து தமது இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்குமாறு, நேற்றையதினம் புதிய பள்ளிவாசலில் இடம்பெற்ற உதவி வழங்கும் நிகழ்வில அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அழைத்தார்.

சமாதானச் சூழ்நிலையில் யாழ். வந்துள்ள முஸ்லிம் மக்கள் அனைவரையும் நாம் இன்முகத்துடன் வரவேற்கின்றோம். அத்தோடு, இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம் மக்கள் புத்தளம் பகுதிகளில் படும் இன்னல்களை அறிந்து கொண்டுள்ளோம். எனவே, உடனடியாகவே அவர்கள் இங்கு வந்து மீளக்குடியமர வசதிகள் செய்யப்படவேண்டும். அவர்கள் இங்கு குடியமர்ந்த பின்னர் முழு உதவிகளையும் செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். (சு)



யாழ். முஸ்லிம் சிறுமி ஒருவருக்கு ஐ.ஐ.ஆர்.ஓ. அமைப்பின் பணிப்பாளர் அன்பளிப்பை வழங்குகின்றார்.

*(படங்கள்- எவ்.எக்ஸ்.சுதர்சன்)*


**நிறைஞ்சனாஸ் சங்கானை**

விஜய், ஸ்நேகா நடித்த

**வசீகரா**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

**URASSIC PARK 3**

(சி-731)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

SPOKEN ENGLISH WITH GRAMMER

*N.VIGNESWARAN ARCHERY*

BLACK ROAD, CHANKANAI,
426 (302) K.K.S. ROAD,
JAFFNA.

(சி-757)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த

**அரசு**

10.30, 2.30, 6.30, 9.30

(சி-732)

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்**

**வேதசிவாகம குருகுல கலாசாலை**

23.04.2003 புதன்கிழமை முதல் தினமும் காலை
6.00 மணிக்கு சந்தியாவந்தனம், சமிதாதானம், பிரம்மஜக்ஞம் மாலை
7.00 மணிக்கு பூ, ஓஷதி, பாக்ய, வருண, பிரம்ம, விஷ்ணு, ருத்ர,
கோ, சூக்தாதிகள் பஞ்சசாந்தி, கோஷ சாந்தி ஆகியன

**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் அவர்களால்**

கலாசாலையில் அத்தியயனம் செய்துவைக்கப்படும்.

இன்று மாலை 6.00 மணிக்கு மஹாசபைக் கூட்டமும்
2 ஆவது உலக இந்துமாநாடு ஆலோசனைக் கூட்டமும்
விஷேட கருத்தரங்கும் நடைபெறும்.

*கருத்துரை*

**சிவஸ்ரீ தா.மஹாதேவக்குருக்கள் அவர்கள்**

(விடயம் - ஆபஸ்தம்ப, போதாயன உபநயன கர்மாக்கள்)

*சிறப்புரை*

**சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவமகாலிங்கம் அவர்கள்.**

அனைத்து அந்தணப்பெருமக்களையும் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய அறிவித்தல்:- சாரதி அனுமதிப்பத்திரம் பெறவிரும்பும் அந்தணர்கள், சிவாச்சாரியார்கள் தங்கள் பெயர், முகவரிகளை ஒன்றியக் காரியாலயத்தில் பதிவுசெய்து கொள்ளவும்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
ஆனைப்பந்தி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.எண் - 021 . 2225611(12)

(சி-858)



# கட்டடப் பொருட்கள் விநியோகத்திற்கான

# gtz கேள்வி அறிவித்தல்

எமது புனர்நிர்மாண திட்டத்தின் கீழ் அடுத்த கட்ட வீடுகள் புனரமைப்பு வேலைகளுக்கு தேவைப்படும் .கட்டடப் பொருட்கள் விநியோகத்திற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

தேவைப்படும் கட்டடப் பொருட்களும் விநியோகிக்கப்பட வேண்டிய பிரதேச செயலர் பிரிவுகளும் பின்வருமாறு:

| பிரதேச செயலர் பிரிவு/ வீடுகளின் எண்ணிக்கை | | தேவைப்படும் பொருட்கள் | | |
|---|---|---|---|---|
| | | மணல் (கியுப்) | கண்ட கல் (கியுப்) | கிறசர் சல்லி 3/4" (கியுப்) |
| சாவகச்சேரி | 175 | 700 | 438 | 350 |
| மருதங்கேணி | 175 | 700 | 438 | 350 |
| சண்டிலிப்பாய் | 50 | 200 | 125 | 100 |
| சங்கானை | 50 | 200 | 125 | 100 |
| பருத்தித்துறை | 50 | 200 | 125 | 100 |
| வேலணை | 50 | 200 | 125 | 100 |
| உடுவில் | 50 | 200 | 125 | 100 |
| கோப்பாய் | 50 | 200 | 125 | 100 |
| நல்லூர் | 50 | 200 | 125 | 100 |
| ஊர்காவற்றுறை | 50 | 200 | 125 | 100 |
| தெல்லிப்பளை | 50 | 200 | 125 | 100 |

மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களை விநியோகிக்கக்கூடிய நிறுவனம் அல்லது தனிப்பட்ட நபர்கள் 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலுள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவத்தில் கேள்விகளை 30-04-2003 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக தபாலிலோ அல்லது நேரடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

GTZ - யாழ்.புனரமைப்புத் திட்டம்,
472, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2222635
2226011
18.4.2003.

வெளிக்கள குழுத்தலைவர்.

(சி-854)


# இன்றைய நாள் இனிய நாள்

**19-04-2003 - சனிக்கிழமை**

**மேடம்** :- தொழிற்சிறப்பு, சிநேகலாபம், களஸ்திரசுகம், இல்லச்சிறப்பு, தேசசுகக் குறைவு.

**இடபம்** :- சரீரசுகம், தேகமெலிவு, பணவரவு, வாக்கு வசீகரம், தருமகாரிய சித்தி.

**மிதுனம்** :- காரிய சித்தி, பணவரவு, பெரியோர் மதிப்பு, மனமகிழ்ச்சி, பெண்களால் நன்மை.

**கர்க்கடகம்** :- நேத்திரரோகம், தேகமெலிவு, சிநேகிதரால் கவலை, மனப்பயம், பிரயாணக் கஷ்டம்.

**சிங்கம்** :- சத்துரு வெற்றி, சமஸ்தான வாழ்வு, காரிய சித்தி, தனதானிய லாபம், சௌபாக்கியம்.

**கன்னி** :- பணவரவு, நன்மதிப்பு, உயர்ந்தநிலை, காரிய வெற்றி, மனப்பயம்.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

**துலாம்** :- ஆரோக்கியம், மன மகிழ்ச்சி, பணவரவு, தனதானிய விருத்தி, தொழிற்சிறப்பு.

**விருச்சிகம்** :- சௌபாக்கியம், காரியசித்தி, தொழில் விருத்தி, உயர்ந்தநிலை, மனமகிழ்ச்சி.

**தனு** :- இனசனக் கொண்டாட்டம், குடும்ப மகிழ்ச்சி, பணவரவு, சிநேக நன்மை, நற்கீர்த்தி.

**மகரம்** :- புதிய ஸ்தானம், மனமகிழ்ச்சி, ஆரோக்கியம், நன்மதிப்பு, குடும்ப மகிழ்ச்சி.

**கும்பம்** :- நேத்திரரோகம், பணவரவு, பூமியால் லாபம், சந்தோஷம், சிநேகநன்மை.

**மீனம்** :- இல்லச்சிறப்பு, புத்திரசுகம், குடும்ப அனுகூலம், தனதானிய நிறைவு, புதிய ஸ்தானம்.

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# அமைச்சரவை, நாடாளுமன்ற கூட்டங்களை தொடர்ந்து பகிஷ்கரிக்கப்போவதாக அறிவிப்பு

(மூதூர்)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல்நிலையை அடுத்து, அமைச்சரவைக் கூட்டங்களையும், நாடாளுமன்றக் கூட்டங்களையும் தொடர்ந்து பகிஷ்கரிக்கப் போவதாக முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் முடிவு செய்துள்ளது.

மூதூரில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற கூட்டத்திலேயே முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் இந்த முடிவை எடுத்தது. இந்தக் கூட்டத்தில் - ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முக்கிய அமைச்சர்கள் முஸ்லிம் காங்கிரஸை விமர்சிப்பதை நிறுத்தவேண்டும் என்றும், அதற்கான வாக்குறுதி வழங்கப்படும்வரை நாடாளுமன்ற, அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்பதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஐ.தே.க. அமைச்சர்களான பி. தயாரட்ண, மஹ்ரூப் ஆகியோரே முஸ்லிம் காங்கிரஸ் குறித்து விமர்சித்து வருகின்றனர்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த நெருக்கடி குறித்து முக்கிய அமைச்சர்களுடன் ஆராய்ந்துள்ளார்.

அமைச்சர் ஹக்கீம் அவசரப்பட்டு முடிவுகளை எடுப்பதாகவும், பிரதமரை மூதூருக்கு வருமாறு விடாப்பிடியாக நிற்பது அவரது அரசியல் முதிர்வின்மையையே காட்டுவதாகவும் பிரதியமைச்சரும், அதாவுல்லா அணியைச் சேர்ந்தவருமான நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

மூதூரில் தமிழர்கள் கடத்தப்பட்ட சம்பவத்துக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் தொடர்புகள் இருப்பதாக ஐ.தே.கவைச் சேர்ந்த மஹ்ரூப் குற்றஞ்சாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிச்சைக்காரர் அனைவருக்கும் அடுத்த மாதம் சமுர்த்தி நிவாரணம்!

நாடு முழுவதும் உள்ள பிச்சைக்காரர்களுக்கு மேமாதம் முதல் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படும் என சமுர்த்தி அமைச்சர் ஆர்.ஏ.டி. சிறிசேன அறிவித்துள்ளார்.

வறுமை நிவாரண ஆணையாளரிடம் பதிவு செய்துள்ள பிச்சைக்காரர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்காக, அனைத்துத் தகவல்களையும் திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முழுமையான தகவல்கள் திரட்டப்பட்டதும் பிச்சைக்காரர்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டு, சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படும் வறுமை நிலையை வைத்து 350 ரூபா, 600 ரூபா, 1000 ரூபா என சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை - நாடு முழுவதும் 15 லட்சம் குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் 9 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

# இந்திய – பாகிஸ்தான் நாடுகளுக்கு ஆர்மிரேஜ் அடுத்தமாதம் விஜயம்!

## போர் பதற்றத்தைத் தணிப்பதில் ஈடுபடுவார்

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் அடுத்தமாதம் இந்திய உபகண்டத்துக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து, இரு நாடுகளுக்குமிடையிலான போர் பதற்றத்தைத் தணிப்பதில் ஆர்மிரேஜ் ஈடுபடுவார் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் முறுகல் ஆரம்பித்தபோதும் - போர்ப் பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியில் ஆர்மிரேஜ் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆர்மிரேஜின் இந்த விஜயத்தை இந்திய அதிகாரிகள் பெரிதும் வரவேற்றுள்ளனர். இந்த விஜயத்தின் மூலம் இந்திய - அமெரிக்க நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த முடியும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

அண்மையில் ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட அமெரிக்க - இந்திய உறவு நிலை, ஆர்மிரேஜின் விஜயத்தின் பின்னர் சுமுகநிலையடையும் என்றும், இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் பாதுகாப்பு ஆலோசகர் அமெரிக்காவுக்குச் சென்று பேச்சு நடத்தியதன் பின்னரே இந்த விஜயம் உறுதிப்படுத்தப்பட்டதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அரச ஊழியர் அனைவருக்கும் மொழி விருத்தி வகுப்புக்கள்!

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க திணைக்கள, கூட்டுத்தாபன, உள்ளூராட்சிச்சபை ஊழியர்களுக்கும் மொழிவிருத்தி வகுப்புக்களை நடத்த அரசாங்கமும், மொழிகள் திணைக்களமும் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதேச செயலக ரீதியாக இந்த மொழிவிருத்தி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன. தமிழ் ஊழியர்களுக்கு ஆங்கில மற்றும் சிங்கள மொழி வகுப்புக்களும், சிங்கள ஊழியர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கில வகுப்புக்களும் நடத்தப்படும்.

வாரத்தில் இரண்டு நாட்கள் கடமை நேரத்தில் இரண்டுமணிநேர வகுப்புக்கள் நடத்தப்படும். இதற்காக ஊழியர்களுக்குக் கடமை லீவு வழங்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

(லி)

## சார்ஸ் நோய் தாக்கம்

# உல்லாசப் பயணிகள் வருகை இலங்கைக்கு அதிகரிப்பு!

தென்னாசியப் பகுதியில் சார்ஸ் தொற்றுநோய் அச்சுறுத்தலால் இலங்கைக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் மட்டும் 41 ஆயிரம் வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம், இலங்கையில் 'சார்ஸ்' நோய் அறிகுறியுடன் காணப்பட்ட ஆறு பேரில் மூவர் வெளிநாட்டவர் எனவும், மூவர் இலங்கையர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இவர்கள் சார்ஸ் நோயினால்தான் பாதிப்புற்றுள்ளார்களா என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. (01)

### அம்புலன்ஸ் வண்டி அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கென வழங்கப்பட்ட ஒரு அம்புலன்ஸ் வண்டி தருமபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு நிக்கொட் நிறுவனத்தினரால் கையளிக்கப்பட்டுள்ளது.

# மட்டு. ரயில்பாதை அமைப்பில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதா?

## அறிவதற்கு விசாரணைக்குழு அமைப்பு

மட்டக்களப்புக்கான சேவையில் ஈடுபட்ட ரயில் தடம்புரண்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட விசாரணைக் குழுவொன்றை அமைச்சர் திலக் மாரப்பன நியமித்துள்ளார்.

ரயில்வே நடவடிக்கை பொது முகாமையாளர் கே.ஏ.பிறேமசிறி, தொழில்நுட்ப முகாமையாளர் கே. ஏ.டபிள்யூ.பெர்னாண்டோ ஆகியோரைக் கொண்ட விசாரணைக்குழுவே இதற்கென நியமிக்கப்பட்டுள்ளது.


மட்டக்களப்பு ரயில் பாதை அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டபோது, அதில் குளறுபடிகள் இடம்பெற்றதா என்பதை ஆராயவே இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது.

தண்டவாளத்திற்குக் கல்போடப்படாமல் சில இடங்களில் மண் போடப்பட்டிருப்பதாகவும், இது பாதுகாப்பற்றதென்றும் தொடர்ந்தும் இதே நிலையில் ரயில் பாதையைப் பாவிப்பது ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பழைய மாணவர் மாநாடு

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் நடாத்தும் ஒரு நாள் மாநாடு கொழும்பில் உள்ள தாஜ்சமுத்திரா ஹோட்டேலில் இன்றுகாலை 9 மணி தொடக்கம் 4 மணிவரை நடைபெறவுள்ளது. வெளிநாட்டில் வசிக்கும் பழைய மாணவர்களும் இம்மாநாட்டுக்கு வருகை தரவுள்ளனர். (72)

## ஆகுதியான அன்னை



போரை மண்ணில் நிறுத்த எழுந்து ஆகுதியானவள்
புதிய வாழ்வை காண எழுந்து ஆகுதியானவள்
சேரும் பகையை விலக்க எழுந்து ஆகுதியானவள்
தேச நலனைக் காக்க எழுந்து ஆகுதியானவள்
கோரும் உரிமை சேர்க்க எழுந்து ஆகுதியானவள்
கொள்கை காத்து உழைக்க எழுந்து ஆகுதியானவள்
பாரின் நலனைக் காக்க எழுந்து ஆகுதியானவள்
பாதகம் மண்ணில் ஒழிக்க எழுந்து ஆகுதியானவள்
நாலு திசையும் பேச எழுந்து ஆகுதியானவள்
நல்ல பேச்சை தொடக்க எழுந்து ஆகுதியானவள்
நீளும் துயரை நிறுத்த எழுந்து ஆகுதியானவள்
நிரந்தர தீர்வை காண எழுந்து ஆகுதியானவள்
ஆளும் உரிமை தமிழர் பெறவே ஆகுதியானவள்
அன்னை மண்ணை எண்ணி எண்ணி ஆகுதியானவள்

- காரை.எம்.பி.அருளானந்தன்



பெரியவெள்ளி தினத்தை முன்னிட்டு யாழ்.மத்தியூஸ் வீதி கிறீன் கிங்ஸ் விளையாட்டுக்கழகத்தினரால் மக்களுக்குக் கஞ்சி வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:எவ்.எக்ஸ்.சுதர்சன்)

## யாழ்.நகரப் படைத்தள விவகாரம் பற்றி

# கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சருடன் ஆராய்வர்

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

யாழ்.மாநரகரசபைக்குச் சொந்தமான காணியில் படையினர் தளம் அமைக்க மேற்கொண்ட முயற்சி தொடர்பான பிரச்சினைகள் பற்றித் கலந்துரையாடல் நடத்தவே, இச்சந்திப்பு இடம்பெறவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையிலான அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னதாக யாழ்.நகரிலுள்ள படைத்தளத்தை இடம்மாற்றுவது தொடர்பான பிரச்சினைக்கு முடிவு காணுமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையில் நடந்த இந்தச் சந்திப்பில், யாழ்.நகரத்திலுள்ள படைத்தளங்களை இடமாற்றுவது தொடர்பாகப் படையினர் தரப்பில் சமர்பிக்கப்பட்ட அறிக்கை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

1350

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி



## சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் வரை)

**உங்கள் விசேஷத் தனித் திறன்கள்**

உறுதியான நெஞ்சம், நினைத்ததை முடிக்கும் ஆற்றல், கடுமையான உழைப்பு, துணிவு, தைரியம், தளராத நெஞ்சம், மன்னிக்கும் பெருந்தன்மை.

**உங்கள் பலவீனம்**

கோபம், அசட்டுத் தைரியம், நண்பர்களுக்காகக் கண்மூடித்தனமாகச் செலவிடுவது, பிடிவாதம், தான்பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று வாதாடுவது.

### புத்தாண்டுப் பலன்கள் 14.04.2003 முதல் 16.08.2003வரை

இதுவரையில் உங்களுக்கு ஏற்பட்டு வந்த நன்மைகள் குறையக்கூடும். குடும்பத்தில் புதிய பிரச்சினைகள் தலைதூக்கும். உத்தியோகம் அல்லது வேறு காரணங்களுக்காகக் கணவர்-மனைவி பிரிந்து வாழநேரிடும். கணவன்-மனைவியிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்படுவதற்கும் கிரகநிலைகளின்படி சாத்தியக்கூறு உள்ளது.

சிலர் அவசர முடிவுகளை எடுத்துவிட்டு, பிறகு அதற்காக வருந்த நேரிடும். திருமண சம்பந்தமான முயற்சிகளுக்குத் தடங்கல்கள் உண்டாகும். நெருங்கிய உறவினர்களுடன் வாக்குவாதமும், பகை உணர்ச்சியும் ஏற்படக்கூடுமெனக் கிரகநிலைகள் எடுத்துக் காட்டுகின்றன.

வாடகை வீட்டிலிருப்பவர்களுக்கு வீட்டுச் சொந்தக்காரர்களால் இடைஞ்சல்கள் ஏற்படும். பாகப்பிரிவினை, சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் ஆகியவை ஏற்பட்டு நீதிமன்றம் செல்ல நேரிடும். தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதறகு வாய்ப்புக்கள் உள்ளன. சிலர் உத்தியோகம் அல்லது தொழில் அல்லது வியாபாரம் அல்லது படிப்பு ஆகியவை சம்பந்தமாக வெளிநாடுகளுக்குச் செல்ல நேரிடும். அதனால் குடும்பத்திலிருந்து தற்காலிகமாகப் பிரிந்திருக்க நேரிடும். உங்கள் ராசியில் அமர்ந்துள்ள பார்வை விசேஷத்தால் தீர்த்த, தல யாத்திரை ஒன்று சித்திக்கும். சில தருணங்களில் அதிகச் செலவினால் நிதிப்பற்றாக்குறை ஏற்படும். அத்தகைய சமயங்களில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும்.

**உத்தியோகம், தொழில், வியாபாரம்**

அதிக அலைச்சலும், கடின உழைப்பும் இருப்பினும் அதற்கேற்ற பாராட்டுதல்களும், முன்னேற்றமும் ஏற்படும். இலாப ஸ்தானத்தில் சனி பகவான் சஞ்சரிப்பது கோள்சார விதிகளின்படி பல நன்மைகளை அளிக்கும். மேலதிகாரிகள் ஆதரவு தருவார்கள், திறமை ஓங்கும், நிர்வாகத்தினர் உங்கள் திறமையையும், உழைப்பையும் பாராட்டுவார்கள். 'சனி மிகக் கண்டிப்பான எஜமான்' என்றொரு பழமொழி வடமொழியில் உண்டு. அவர் இலாப ஸ்தானத்திற்கு வரும்போது, எந்த ராசியினராக இருந்தாலும் சிறந்த நற்பலன்களை அளிப்பார்.

சிம்மராசியின் அதிபதியான சூரியனுக்குச் சனி பகைக்கிரகமாக இருப்பினும் கோள்சார விதிகளுக்குச் சனியும் கட்டுப்பட்டே ஆவர். ஆதலால் அடுத்துவரும் இரண்டரை ஆண்டுகளுக்குச் சனிபகவானால் பல நன்மைகளை எதிர்பார்க்கலாம். தொழிலதிபர்களுக்கு நல்ல அபிவிருத்தி ஏற்படும். வர்த்தகர்களுக்குச் சிறந்த முன்னேற்றம் காத்துள்ளது. ஏற்றுமதி- இறக்குமதி துறையினருக்கு அலைச்சலும், வெளிநாட்டுப் பயணங்களும் தவிர்க்க இயலாதவை. இருப்பினும் அவற்றால் நல்ல பலன்கள் ஏற்படும்.

ஜீவன ஸ்தானத்தில் ராகு இருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதனால் எந்தக் காரியமாக இருப்பினும் நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். சிற்சில சமயங்களில் சக ஊழியர்களினால் மறைமுகமான தொல்லைகளும், மேலதிகாரிகளுடன் கருத்து வேற்றுமையும் ஏற்படக்கூடும். ஜாதகத்தில் ராசி ஒருவரின் மனநிலையைக் குறிக்கிறது. இவ்விதம் ஒருவருடைய மனநிலையை அவ்வப்போது பிரதிபலிக்கும் இடத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் போது பலவிதப் பிரச்சினைகளை உண்டுபண்ணுவார். ஆதலால் குருபகவான் உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் காலகட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டு அவசர முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இத்தகைய தருணங்களில் நீங்கள் உங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை மிகப்புராதனமான ஜோதிட நூல்கள் வலியுறுத்திக் கூறியுள்ளன. இன்று பொறுத்தால் நாளை வாழ்வு உண்டு.

**கலைஞர்கள்**

புதிய வாய்ப்புகள் குறைவில்லாது கிடைக்கும். உங்கள் கலைத்துறையைப் பொறுத்தவரையில் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானால் வருமான உயர்வு, புகழ், செல்வாக்கு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம்.

ஆனால், குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு இல்லற வாழ்க்கையில் பலவித சிரமங்களும், அமைதியின்மையும் ஏற்படும். இல்லற வாழ்க்கை கசக்கும். கணவருக்குச் சிம்மராசி என்றால் மனைவியாலும், மனைவிக்குச் சிம்மராசி என்றால் கணவராலும் கஷ்டங்கள் ஏற்படும். பெண்கள், பிள்ளைகள் ஆகியோர் உங்கள் அறிவுரைகளுக்கு எதிராக நடந்து கொள்வார்கள். அதனால் மனம் வேதனையடையும். வெளியில் சுகம். வீட்டிற்குள் துன்பம் என்ற சூழ்நிலைதான். குடும்ப வாழ்க்கை நிம்மதியில்லாமலிருப்பதால் கலைத்தொழிலில் ஏற்படும் முன்னேற்றத்தைச் சந்தோஷமாக அனுபவிக்கும் மனோபாவம் இருக்காது.

இருவரில் எவரிடம் தவறு இருப்பினும் மற்றவர் விட்டுக்கொடுத்து நடந்து கொள்வது உங்கள் எதிர்கால நன்மைக்கும், நற்பெயருக்கும், அந்தஸ்திற்கும், எதிர்கால முன்னேற்றத்திற்கும் உதவும்.

**அரசியலில் ஈடுபடுவோர்**

வருமானம் உயரும். ஆனால், அதற்கேற்ற செலவுகளும் இருக்கும். மேலிடத்தில் ஆதரவு அதிகரிக்கும். சிலருக்கு அரசாங்கத்தில் அல்லது அரசாங்க சார்பு பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு பொறுப்புள்ள பதவிகிடைக்கக் கிரக நிலைகளின்படி சாத்தியக்கூறு உள்ளது. கட்சியிலும், மக்கள் மத்தியிலும் செல்வாக்கு அதிகரிக்கும்.

**மாணவமணிகள்**

படிப்பில் முன்னேற்றம் நீடிக்கும். இவ்வருட ஆண்டுத்தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவீர்கள். இருப்பினும் குடும்பத்தில் ஏற்படும் சூழ்நிலையின் காரணமாக மனதில் ஏற்படும் கவலைகளால் பாடங்களில் மனதை முழுமையாகச் செலுத்த முடியாமற்போகும். இருப்பினும் வித்யா ஸ்தானத்தில் நல்ல சுபபலம் பெற்றிருப்பதால் இது கல்வி முன்னேற்றத்தைப் பாதிக்காது. வெளிநாடுகளில் தங்கி விசேஷக் கல்வி பயின்று வரும் மாணவ மாணவியருக்குக் கிரகங்கள் உறுதுணையாக இருக்கின்றன.

• இருப்பினும் தாய்நாட்டிலுள்ள தங்கள் பெற்றோர்கள், உறவினர்கள் ஆகியோரைப் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். சிலருக்குக் கல்விச் சலுகைகள் கூடும். அவரவரது ஜெனன கால ஜாதகத்தை ஆராய்ந்தால் எந்த அளவுக்குச் சலுகைகள் கிடைக்கும் என்பது தெரியவரும்.

**விவசாயத்துறையினர்**

பயிர்கள் நன்றாகச் செழித்து வளரும் எனக் கிரகநிலைகள் உறுதி செய்கின்றன. ஆண்டு சித்திர பானுவைப்போல் இல்லாமல் இந்தத் தமிழ்ப் புத்தாண்டில் நல்ல மழை பொழியும். அதனால் விளைசசல் திருப்திகரமாக இருக்கும். கடன் தொல்லைகள் குறையும். ஆடு, மாடுகள் அபிவிருத்தியடையும்.

**பெண்மணிகள்**

குடும்பப் பொறுப்பிலுள்ள பெணகளுக்குச் சிரமமான காலமாகும். கணவருடன் மனவேறுபாடு ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. குழந்தைகளாலும் சில பிரச்சினைகள் ஏற்பட்டு பின்பு சரியாகும். உடல் நலனிலும் உங்களுக்குக் கவனம் தேவை. நெருங்கிய உறவினர்களால் சிரமங்கள் ஏற்படக்கூடும்.

சிம்மராசியில் பிறந்து வேலை பார்க்கும் சகோதரிகள் பணியாற்றுமிடத்தில் பல நன்மைகளை இனி எதிர்பார்க்கலாம். சிம்ம ராசிக்குப் பகைக் கிரகமான சனிபகவான் இதுவரை ஜீவன ஸ்தானத்தில் நிலை கொண்டிருந்ததால், உங்களுக்குப் பல சிரமங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். தற்போது சனிபகவான் உங்கள் ராசிக்கு இலாப ஸ்தானத்திற்கு மாறியிருப்பதால் சிறு பதவி உயர்வு, ஊதிய உயர்வு, சலுகைகள், தற்காலிகப் பணியில் உள்ளவர்கள் நிரந்தரமாக்கப்படுவது நிச்சயமாக ஏற்படும்.

தமிழ்நாட்டின் பிரபல
சோதிட சக்கரவர்த்தி
ஏ.எம்.இராஜகோபாலன்

**ஆரோக்கியம்**

அதிக அலைச்சலினாலும், குடும்பக் கவலையினாலும் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். இதற்குக் காரணம் சிம்மராசிக்கு அஷ்டமாதிபதியான குருபகவான் ஜென்மராசியில் சஞ்சரிப்பதே ஆகும்.

**பொருளாதாரம்**

இலாப ஸ்தானத்தில் சஞ்சரிககும் சனிபகவானால் வருமானம் திருப்திகரமாக இருக்கும். தொழிற் துறையினர், வியாபாரிகள் ஆகியோருக்கு இலாபம் அதிகரிக்கும். ஆதலால், பணப்பற்றாக்குறை ஏற்படாது. எனினும் குருபகவான் ஜெனம ராசியில் சஞ்சரிப்பது குடும்பத்தில் செலவுகளை அதிகரிக்கும். பல பிரச்சினைகளினால் பணம் விரயமாகும். வருமானம் மிகவும் நல்லபடி இருந்தும் பணத்தைச் சேமிப்பது மிகவும் கடினமாகும் எனக் கிரகநிலைகள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

ஆதலால் இப்புத்தாண்டின் ஆரம்பத்திலிருந்தே இந்த ராசியினர் திட்டமிட்டுச் செலவு செய்வதும், வீண் செலவுகளைத் தவிர்ப்பதும் மிகவும் அவசியம்.

### 17.08.2003 முதல் 12.04.2004வரை

குடும்பச் சிரமங்கள் சற்றுக் கடினமாக இருக்கும். மனைவியின் ஆரோக்கியம் குறையும். வீண் அலைச்சலும், பணவிரயமும் அதிகமாக இருக்கும். ஏதாவது ஒரு காரணத்தினால் மனம் நிம்மதியில்லாமல் அலைபாயும். திருமண சம்பந்தமான முயற்சிகளில் தொடர்ந்து தடங்கல்களும், தாமதமும் ஏற்படும்.

வருமானத்திற்கு மேல் செலவுகள் ஏற்படுவதால் பணப் பற்றாக்குறை ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. சிலருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படுவதற்கு கிரகநிலைகளின்படி சாத்தியக்கூறு உள்ளது.

தொழிலதிபர்கள், உத்தியோகத்தர்கள், வியாபாரத்துறையினர் ஆகிய அனைவரும் தத்தமது தொழில்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம்.

கலைத்துறையினர் தங்கள் மனைவியுடன் விட்டுக் கொடுத்து நடந்து கொள்வது குடும்பத்திற்கு நல்லது. ஏனெனில் தசா புத்திகள் பாதமாக இருப்பின் கருத்து வேற்றுமை விவகாரத்தில் கொண்டு விடக்கூடும் எனக் கிரகநிலைகள் எச்சரிக்கின்றன.

(நாளை கன்னிராசி)

## திலீபனின் நினைவுத் தூபி புனரமைப்பு

தியாகதீபம் திலீபனின் நினைவாக, நல்லூர் ஆலயப் பின்பக்கமாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளது.

முன்னர் திலீபனின் நினைவாக அமைக்கப்பட்ட தூபி- 1995 ஆம் ஆண்டு இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது, இடித்து அழிக்கப்பட்டது. இதுவே தற்பொழுது புனரமைக்கப்பட்டுப் புதுப் பொலிவுடன் மீண்டும் காட்சி தந்து கொண்டிருக்கின்றது.

(13)

## சார்ஸ் நோயாளி எங்கே? சுகாதார அதிகாரிகள் தேடுதல்!

(கொழும்பு)

சார்ஸ் நோயால் பீடிக்கப்பட்ட ஒருவரைத்தேடி, சுகாதார அதிகாரிகள் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றுக்குச் சிகிச்சை பெறச சென்ற நோயாளிக்குச் சார்ஸ் நோய் தொற்றியிருப்பது தெரியவந்தது. இதையடுத்து, அந்தத் தனியார் வைத்தியசாலை நிர்வாகம் அங்கொட வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அனுப்பி வைத்தது.

ஆனால், அந்த நோயாளி இதுவரை அங்கொட வைத்தியசாலையிலோ அல்லது வேறு வைத்தியசாலையிலோ அனுமதிக்கப்படவில்லை. தற்போது தலைமறைவாகியுள்ள இந்த நோயாளியைத்தேடிச் சுகாதார அதிகாரிகள் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

மேற்படி நோயாளி சார்ஸ் நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தனியார் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.


# வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY



## முதலாவது அகவையில்

பெயர் : ச.ஹம்சாயினி
முகவரி : தொட்டிலடி
சங்கானை.





பெயர் :நி.நியூசியா
முகவரி : 74/1 கடற்கரை வீதி
நாவாந்துறை.

## ஒன்பதாவது அகவையில்

பெயர் : ப.கயானி
முகவரி : பயிற்றோலை
அச்சுவேலி.



## பத்தாவது அகவையில்



பெயர் : த.சுஜீவன்
முகவரி : 53/1, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------
முகவரி :--------------------
பிறந்த ஆண்டு:--------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்பம்

# வார்த்தை விளையாட்டு - 29

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சு | | 2 | | | 3 |
| | | 4 | | | ம் |
| 5 | ல | | | | |
| | | த 6 | | 7 | |
| 8 | | | | | |
| | | 9 | | | கு |

முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

## இடமிருந்து வலம்

1. இது சுகம் தரும்.
4. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். இதன் மூலம் ஒழுங்கு பேணப்படுகிறது.
5. வலு
6. காயும், பழமும் கறிக்குப் பயன்படுத்தப்படும்.
8. அழியாத செல்வம்.
9. வணங்கு (வலமிருந்து இடமாக)



## மேலிருந்து கீழ்

1. கடினம் என்பதன் எதிர்ப்பதம்.
2. பத்து.
3. குளிர்ப்பிரதேச மக்கள் அணியும் ஆடைகள் இதனாலேயே உருவாக்கப்படுகின்றன.
6. அரிசி குற்றும்போது கிடைக்கும் கழிவுப்பொருள்.
7. ஒரு சுவை.

## வார்த்தை விளையாட்டு - 28 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. மண்வெட்டி
3. சம்பூர்
5. மையம்
6. சணல்
8. ரகம்
9. சவுக்கு



**மேலிருந்து கீழ்**

1. மரவள்ளி
2. வெம்மை
3. சச்சரவு
4. புத்தகம்
7. குரல்.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 23-04-2003
சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 28

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
**தசாகினி தவேந்திரன்**
862, ஆஸ்பத்திரி வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

*2 ஆம் பரிசு -*
**நாகேஸ்வரன் கிரியுகன்**
கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

*3 ஆம் பரிசு -*
**செல்வராசா சாத்வீகன்**
இடைக்குறிச்சி கிழக்கு, வரணி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## முயலாரின் சாகசங்கள்

ஆங்கிலத்தில் - எனிற் பிளைற்றன்
தமிழில் - சொக்கன்

நரியாருக்கு முயலாரைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் வலுத்து வந்தது. மூலை முடுக்குகள், புதர்கள், வேலிகள் ஆகிய மறைவிடங்களில் ஒளித்திருந்து, முயலார் மீது பாயச் சமயம் பார்த்திருந்தார்.

ஒருநாள் முயலார் "நரியாரே நீர் என்னோடு கொண்ட நட்புக்கு இது பொருத்தமாயில்லை. சமயம் கிடைத்தால் என்னைக் கொன்று சாப்பிடுவீர் போலிருக்கிறது" என்று சொன்னார்.

நரியார் அதை மறுக்கவில்லை. "என்றோ ஒரு நாள் நான் உம்மில் பாய்ந்து தோலை உரிக்காது விடமாட்டேன்" என்றார். முயலாருக்கு இது கவலையை அளித்தது. நரியாரிடமிருந்து தப்புவதற்கு அவர் பல வழிகளை யோசித்தார். கடைசியில் அவருக்கு நல்லதொருவழி புலப்பட்டது. சட்டைப் பைக்குள் வைக்கத்தக்க பெரியதொரு கடிகாரத்தை விலைக்கு வாங்கினார். அது ஒவ்வொரு நிமிஷத்துளியையும் 'டக்டிக்' என்று பெரும் சத்தமிட்டு வெளியிடக்கூடிய கடிகாரம்

இந்தக் கடிகாரத்தை அழகாகப் பொதி செய்து 'ஒரு நண்பனின் அன்பளிப்பு' என்று எழுதி, நரியாரின் விலாசத்திற்கு அனுப்பிவைத்தார்.



நரியாருக்குக் கடிகாரம் கிடைத்தது பெரும் புளுகம். அவர்தம் நண்பர்களுக்கு அதைக் காட்டிப் பெருமை அடைந்தார். எப்பொழுதும் அதைத் தமது சட்டைப்பைக்குள்ளேயே கொண்டு சென்றார். இதனால் அவர் எங்கு இருந்தாலும், தெரிந்து கொள்ளலாம்.

முயலார் இந்தச் சத்தத்தைப் பயன்படுத்திக்கொண்டு நரியரிடமிருந்து தப்பிக்கொண்டது மாத்திரமில்லை, நரியாருக்குத் தொியாமலே அவரின் மறைவிடத்தில் செனறு, அவர் வாலைப் பிடித்து இழுத்தல், முதுகில் பாய்ந்து திடுக்குற வைத்தல் முதலிய குறும்புகளாலும் தொல்லை கொடுத்து வந்தார்.

நரியார் தமது கடிகாரத்தில் கூடிய கவனம் செலுத்தி, அதை எப்பொழுதும் தம் சட்டைப்பையினுள்ளே வைத்திருக்கவும் முயலார் தந்திரம் செய்தார். அதில் வெற்றியும் பெற்றார்.

'நரியாரே உமது கடிகாரம் மிகவும் சிறந்தது. அதை எனக்குத் தருகிறீரா? எனக்கு அதில் ஆசை ஆசையாக இருக்கிறது"

"நீர் இதில் ஆசை வைக்கவேண்டாம். உமக்கு ஒரு நாளும் இதைத் தரமாட்டேன்"

இந்த உரையாடலுக்குப் பிறகு நரியார் தமது கடிகாரத்தில் முன்னரிலும் அதிக கவனமாய் இருந்தார். அவரது சட்டைப் பையை விட்டு அது வெளியில் வருவதே இல்லை.


ஒருநாள் முயலார் நரியாரைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார். "கடிகாரம் உமக்குக் கிடைத்த நாளிலிருந்து என்னைப் பிடித்துத் தோலுரிப்பதை மறந்தே விட்டீர். இல்லையா?"

அப்பொழுது தான் நரியாருக்கு முயலாரின் சூழ்ச்சி விளங்கியது. "ஓஹோ நீர்தானா கடிகாரத்தைப் பரிசாக அனுப்பிய நண்பர்? உம்மை நான் கவனித்துக் கொள்கிறேன். விரைவில் உமக்குச் சரியான பாடம் கற்பிப்பேன்" என்று நரியார் உறுமினார்.

ஆனால், நரியாரின் கைகளிலே இலகுவில் அகப்படக்கூடிய ஏமாளியா முயலார்.

## பாதுகாப்பான இல்லம் நன்றி-ரிங்கிள்

**அங்கம் - 03**



# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
தி.சரண்யா
கற்கும் பாடசாலை :-
யா/ கொற்றாவத்தை, அரசினர் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
பாட்டு, விளையாட்டு, நடனம்.

முழுப்பெயர் :-
கி.ஷர்மிலன்
கற்கும் பாடசாலை :-
யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், ரீ.வி பார்த்தல், வானொலி கேட்டல்.





முழுப்பெயர் :-
கி.சுகந்தினி
கற்கும் பாடசாலை :-
கிளி/ பளை மத்திய கல்லூரி.
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :
கல்வித்துறை, பாடல்.

முழுப்பெயர்:-
ந. ரமேஸ்
கற்கும் பாடசாலை :-
யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப் புத்தகம், தொலைக்காட்சி, கிரிக்கெட்.

முழுப்பெயர்:-
யோ.தர்சினி
கற்கும் பாடசாலை :- யா/ மகாஜனாக் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப் புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.


முழுப்பெயர்:-
சி.றம்யா
கற்கும் பாடசாலை :-
யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
ஆங்கிலப் போட்டிகளில் பங்குபற்றல், பாடல் பாடுதல்.

# நரியைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்

சிவப்புநரி, குள்ளநரி, தங்கநரி என மொத்தம் 21 வகைகள் நரிகளில் உள்ளன. இவற்றுக்கிடையே நிறம், வாலின் அடியிலுள்ள பகுதியின் நிறம், வாழும் இடத்தைத் தேர்வு செய்தல் ஆகியவற்றில் வித்தியாசங்கள் உள்ளன.

சமவெளிகள், புல்வெளிகள், திறந்த காடுகள், மலைகள், புதர்கள் உள்ள பகுதிகள், பாலைவனங்கள் என எல்லா இடங்களிலும் வாழுந்தன்மை கொண்டவை நரிகள். அவ்வளவு ஏன்? மனிதர்கள் வசிக்கும் கிராமங்களில்கூட, கிடைத்ததை உண்டு வாழப்பழகிக்கொள்பவை நரிகள்.

பெரும்பாலும் மாமிசம்தான் நரியின் முக்கிய உணவு. சிறிய மிருகங்களான ஆடு, பாம்பு, ஊர்வன, குட்டிப்பறவைகள் இவற்றை வேட்டையாடும். இவை எதுவும் கிடைக்காதபோது பழங்களையும் புற்களையும்கூட உண்ணும்.



ஆண், பெண் நரிகள் ஜோடி சேர்ந்ததும் முதலில் தங்கள் எல்லையை வகுத்துக்கொள்ளும். வேறு நரிகள் ஏதாவது வந்தால் சண்டை போட்டுத் துரத்தும்.

நரிகளுக்கு ஒரு பிரசவத்தில் சுமார் இரண்டில் இருந்து ஆறு குட்டிகள் வரை பிறக்கும். சுமார் எட்டு வருடங்கள் வரை தொடர்ந்து குட்டி போடும் நரிகளின் கர்ப்ப காலம் 63 நாட்கள்.

பத்து நாட்கள் வரை குட்டிகள் கண்களைத் திறக்காது. தாயிடம் பால் குடிப்பது மட்டும்தான் சிலவாரங்களுக்கு வேலை. தான் பிறந்த புதரை விட்டு மூன்று வாரம் வரை வெளியே வராது.

மூன்று வாரங்கள் கழித்து தன்னுடன் பிறந்த நரிக்குட்டிகளுடன் வெளியே விளையாட வரும். சில நாட்கள் வெறுமனே கடித்து, கிள்ளி விளையாடும். பிறகு வேட்டைக்கான பயிற்சியாக ஒருவரையொருவர் துரத்துதல், மேலே விழுந்து தாக்குதல் என்று சற்று முரட்டு விளையாட்டுக்களில் இறங்கிவிடும்.

இரண்டு மாதங்கள் வரை தாய்ப்பாலையும், பெற்றோர் மென்று தரும் உணவையும் உண்ணும். மூன்று மாதங்களில் பெற்றேர்ரைப் பின் தொடர்ந்து எல்லைகளைப் பற்றியும், வேட்டையாடுதல் பற்றியும் கவனித்துக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கும். ஆறு மாதங்களில் தாங்களே சிறிய மிருகங்களை வேட்டையாட ஆரம்பிக்கும்.

ஆனாலும், சில காலத்துக்கு அதன் பெற்றோர் அவற்றுக்கு ஊட்டிக்கொண்டும், அவற்றுடன் விளையாடிக்கொண்டும்தான் இருக்கும்.

பிரசவத்துக்குப் பிறகு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பதுங்குகுழிகளை மாற்றிக்கொண்டே இருக்கும். இது மற்ற மிருகங்களிடமிருந்து தனது குட்டிகளைக் காப்பாற்றுவதற்காக.

சில சமயம் குட்டிகள் கடைசிவரை பெற்றோருடனே தங்கி, அடுத்துப் பிறக்கும் குட்டிகளைக் கவனித்துக் கொள்ளும், பெற்றோர் வேட்டையாடச் சென்ற சமயங்களில் குட்டிகளைக் கவனித்துக்கொள்வது, அவற்றுக்கு உணவு தருவது என்று பொறுப்பாக வீட்டைப் பார்த்துக்கொள்ளும். சில சமயம் சின்னக் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் தாய்நரிக்கு வேட்டையாடி உணவும் தரும்.

# பொது அறிவுத் துளிர்கள்

1. எகிப்தில் காணப்படும் உலக அதிசயம் ~ பிரமிட்டுக்கள்
2. வெள்ளை யானை நாடு ~ தாய்லாந்து
3. கனவுக் கோபுர நகரம் ~ ஒக்ஸ்போட்
4. இத்தாலியின் பாதம் ~ சிசிலி
5. உலகின் மிக வறிய நாடு ~சயர்
6. சீனாவின் துயரம் ~ குவாங்கோநதி
7. பூமி கோளத்தின் தலைநகர் ~ வொஷிங்ரன்
8. இந்திய ஏவுகணைகள் ~ அக்கினி, பிருத்வி, திரிசூல்
9. பொற் கோபுர நாடு ~ பர்மா
10. ஆயிரம் ஏரி கொண்ட நாடு ~ பின்லாந்து
11. அதிவேக பயணிகள் விமானம் ~ கொன்கோட்
12. நைல் நதியின் கொடை ~ எகிப்து
13. வங்காளத்தின் துயரம் ~ தாமோதர் நதி
14. பூங்காநகரம் ~ சிக்காக்கோ
15. பவளத் தீவு ~ அயர்லாந்து

வ.பிரகாஷ்.
தரம் - 09,
அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்.

# விடுகதைகளும்

01. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?
02. அவனுக்கு வீடு மற்றவர்களுக்கு வலை அது என்ன?
03. வீடுவாசல் காப்பவன், விசுவாசமாய் இருப்பவன், கடிக்கவும் மாட்டான், குரைக்கவும் மாட்டான், கதவை ஒட்டிக் கிடப்பான் அவன் யார்?
04. பகலெல்லாம் ஊர் சுற்றுவான் இரவில் கதவோரம் கிடப்பான் அவன் யார்?




# விடைகளும்

01. சிரிப்பு
02. சிலந்திவலை
03. பூட்டு
04. செருப்பு

ர.தேனுகா
ஆண்டு10

# உலக அதிசயங்கள்

### 4.எபிஸஸ் தேவாலயம்
(Temple of Artemis at Ephesus)



டயானாவின் தேவாலயம் என்றும் இதனைக் குறிப்பிடுவர். கி.பி 4 ஆம் நூற்றாண்டில் மாவீரன் அலெக்சாண்டரின் காலத்தில் ஆசியாமைனரில் இதன் வேலைகள் பூர்த்தியடைந்தன. இது பளிங்குக் கற்களாலானது.

சுமார் 342 அடி நீளமும், 164 அடி அகலமும், 60 அடி உயரமுமுள்ள இத்தேவாலயம் 127 மிகப் பெரிய தூண்களைக் கொண்டது. கி.பி. 262 ஆம் ஆண்டில் இந்த அதிசயம் அழிந்துவிட்டது.

### 5.ஹலிகர் நஸ்ஸஸ் கல்லறை
(The mausoleum at Hali carn -assus)



ஆசியா மைனரில் ஆர்ட்டிமஸியா அரசி தன்னுடைய கணவர் கரியயிலே மெனகோலஸ் மன்னரின் நினைவுக்காக கி.மு.352 இல் இந்தக் கல்லறை 140 அடி உயரமுள்ளது. வட்ட வடிவமுள்ளது. இந்த புராதன உலக அதிசயமும் ஒரு பூகம்பத்தினால்தான் அழிந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

(தொடரும்)

# நாய்க்குட்டி



நாய்க்குட்டி நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி
'ஜிம்மி' என்று அழைத்தவுடன்
வாலை வாலை ஆட்டி வரும்
மீனும் சோறும் என்றாலே
விரும்பியே உணவு கொள்ளும்
துள்ளித் திரிந்து வீடுதனை
கள்வனிடமிருந்து காத்திடும்
நன்றியின் சின்னமே
என்வீட்டு நாய்க்குட்டி

ரீ.கரன்,
வயல் எல்லை,
கலட்டி.

# உங்கள் கைவண்ணம்



பா. லதீப்,
தரம் - 8
யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :....................................
கற்கும் பாடசாலை :....................................
கற்கும் தரம் :....................................
வீட்டு முகவரி :....................................
பிறந்த திகதி :....................................
ஆர்வமுள்ள துறைகள் :....................................
:....................................

.................. திகதி
.................. ஒப்பம்

.................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம்
.................. பெற்றோர் ஒப்பம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

மனத்தான் ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி
இனத்தான் ஆம் இன்னான் எனப்படும் சொல்.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## திட்டமிட்டுத் தூண்டப்படும் இனவிரோதம்!

கிழக்கில், தமிழ் - முஸ்லிம் இனங்களிடையே மோதல்களைத் தூண்டி - அதன் மூலமாக அரசியல் ஆதாயம் தேட முனையும் சக்திகள் - மூதூரிலும் தம் கைவரிசையைக் காட்டியுள்ளன.

மூதூரில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டதாக வெளியான தகவல்களை வைத்து ஆரம்பிக்கப்பட்ட 'அரசியல் நடவடிக்கைகள்' - இன்று நான்குபேர் கொல்லப்படவும் பலர் படுகாயமடையவும், தமிழ்-முஸ்லிம் இனங்களிடையே பதற்றத்தைத் தோற்றுவிக்கவும் காரணமாகிவிட்டிருக்கின்றன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள்- தமது சுயலாப நோக்கில் இந்தப் பிரச்சினையைக் கையாள முற்பட்டதும் - இதன் தொடராக, பிரச்சினை திசை திருப்பப்பட்டு தமிழர்களுக்கெதிரான பழிவாங்கும் நடவடிக்கையாக உருமாறியிருப்பதுமாக - மூதூர்ப்பகுதி முழுவதுமே இரத்தக்களறியாகியிருக்கிறது.

ஏற்கனவே - கிழக்கு மாகாணத்தில் இழந்து விட்டிருக்கும் தமது கட்சிக்கான செல்வாக்கையும், உட்கட்சிப் பூசல்களையும், ஐக்கிய தேசியக் கட்சி மீதான போட்டி அரசியலையும் - முஸ்லிம் மக்கள் மத்தியில் தமிழர் விரோதப் போக்கை தூண்டிவிடுவதன் மூலம் சமாளித்துக் கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸினால் தொடங்கப்பட்ட அரசியல் நாடகம் - இன்று உயிர்ப்பலிகளுடன், கோரமுகம் காட்டியிருக்கிறது.

தமிழ்-முஸ்லிம் இனங்களிடையே விரோதத்தையும், பகையுணர்வையும் உருவாக்கிக் கொண்டு - அதன் மூலமாக, முஸ்லிம் சமூகத்தினருக்கான காவலர்கள் தாங்களே என்ற தோற்றத்தைப் பெற்றுக்கொள்ள முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் மேற்கொண்ட முயற்சிகள் - இதுவரை காலமும் எத்தகைய இனமோதலும் நடைபெற்றிராத தோப்பூர்ப் பகுதியில்கூட - அசம்பாவிதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏற்கனவே, அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் முறுகல்நிலையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சம்பாதித்துவிட்டநிலையில் - திருமலையில் முஸ்லிம் வாக்காளர்களைப் பெருமளவில் கொண்டுள்ள மூதூர்ப் பகுதியிலும் - ஐக்கிய தேசியக் கட்சியினரால் தமக்கிருந்த ஆதரவு பாதிக்கப்பட்டுவிடும் என்ற நிலையில் - 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்ற ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சியையும் தமிழர்களையும் தாக்கிக்கொள்ள முஸ்லிம் காங்கிரஸ் மூதூரில் களமிறங்கியது.

இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டதாக வெளியான செய்தியும், கடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் இளைஞர்களில் ஒருவரின் தாய் தற்கொலை செய்து கொண்டதான சம்பவமும் - இந்த அரசியல் மோதலுக்கு வாய்ப்பானது.

குறிப்பிட்ட முஸ்லிம் பெண்மணியின் மரணச்சடங்கில்- தே.க. அமைச்சர் மஹ்ரூப் - முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களை விமர்சிக்க, அமைச்சர் ஹக்கீம் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் - ஐ.தே.கவின் முஸ்லிம் தலைவர்களை விமர்சிக்க - இந்த மோதல், தமிழர்களின் மீதான தாக்குதலுக்கு வடிவம் கொடுத்திருக்கிறது.

தமிழர் விரோதப் போக்குடன் காத்திருக்கும் சில முஸ்லிம் அடிப்படைவாதச் சக்திகளும், அரசியற் பிரமுகர்களும் - இந்த மோதலின் விளைவுகள் உண்மையில் ஐ.தே.கவுக்கும் - முஸ்லிம் காங்கிரஸுக்குமானதே என்றிருந்ததை மாற்றி - முஸ்லிம் பகுதிகளில் வாழும் தமிழர்கள் மீதான காழ்ப்புணர்வைத் தீர்த்துக்கொள்ள இப்பதற்றத்தைப் பயன்படுத்தினர். இது சிலர் பலியாகவும், பலர் படுகாயமடையவுமான நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது.

முஸ்லிம் சமூகத்தினரிடையேயுள்ள கட்சித் தலைவர்களுக்கிடையிலான அதிகாரப் போட்டிக்கும், அரசியல் ஆதாயம் தேடும் சுயநலப் போக்குக்கும், தமிழ்-முஸ்லிம் இனங்களிடையிலான நல்லுறவு பலியாக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டதாக வெளியான விவகாரத்தை - நிதானமாக அனுகியிருக்க வேண்டிய நிலையில் - குறுகிய அர்சியல் நோக்கங்களுக்காக, இனமோதலாக்கி கைமேல் பலன் அனுபவிக்கத் திட்டமிட்டு - பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டிய அரசியல் தலைவருக்குரிய பண்பை இழந்தவராக அமைச்சர் ரவூப் ஹக்கீம் காணப்படுகின்றார்.

முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டதற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என விடுதலைப் புலிகள் அறிவித்துவிட்ட பின்பும் - இது தொடர்பாக எழுந்த அமைதியீனத்தை, புலிகளுடன் கலந்துபேசி தணிக்கும் வாய்ப்புக்கள் இருந்தபோதும் -

அதனைவிடுத்து - பதற்றத்தை அதிகரிப்பதற்கும், போட்டி அரசியலுக்கும் - நிதானத்தை இழந்தவராக அமைச்சர் ஹக்கீம் நடந்து கொண்டிருக்கிறார்.

மூதூரில் மையங்கொண்டுள்ள இந்தப் பதற்றத்தையும் மோதல்களையும் பயன்படுத்தி இனவிரோதத்தை இன்னமும் அதிகரிக்கவும், அமைதிச் சூழலைப் பாதிக்கச் செய்யவும் - வேறு தீயசக்திகளும் களமிறங்கலாம் என்பதே மக்களின் பெரும் அச்சமாக உள்ளது.

# வெளிநாட்டுக்கு வேலைதேடிச் செல்வோருக்கு ஆங்கில, தகவல் தொழில்நுட்ப அறிவில்லை!

## அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறுகிறார்

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புத் தேடிச் செல்லும் தொழிலாளர்களில், 85 முதல் 90 சதவீதமான இலங்கையர்கள் ங்கில அறிவையோ, தகவல் தொழில்நுட்ப அறிவையோ கொண்டிருப்பதில்லை என்று தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து செல்லும் பணிப்பெண்கள்கூட ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் திறமை வாய்ந்தவர்களாக உள்ளனர். இதனால் அவர்களுக்கு நல்ல வேலைகள் கிடைக்கின்றன.

இதனாலேயே இங்கும் க.பொ.த. சாதாரணதர வகுப்பில் தகவல் தொழில் நுட்பத்தை விருப்பப்பாடமாக அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தகவல் தொழில்நுட்ப வசதிகளை நாடுமுழுவதிலும் ஏற்படுத்தாத காரணத்தால்தான், தகவல் தொழில் நுட்பத்தை கட்டாய பாடமாக்கவில்லை.

இதனைக் கவனத்திற்கொண்டு அரசாங்கம், க.பொ.த. சாதாரணதர வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளில் இன்னும் ஐந்து வருடங்களில் கணினி வசதிகளை ஏற்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

## அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் தாய்லாந்திலேயே நடக்கும்!

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அடுத்தகட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் இடத்தைத் தாய்லாந்திலிருந்து மாற்றும் உத்தேசம் எதுவுமில்லை என அரசாங்க சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

உயிர்கொல்லி 'சார்ஸ்' வைரஸின் தாக்கம் காரணமாக இம்மாதம் 29 ஆம் திகதி தாய்லாந்தில் நடைபெறத் திகதி நிர்ணயம் செய்யப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள், வேறு இடங்களுக்கு மாற்றப்படலாம் என்ற ஊகங்களுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தாய்லாந்தில் பேச்சுவார்த்தை இடம்பெறும் என்பதை உறுதிப்படுத்திய பேணாட் குணதிலக, அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சிநிரல் பற்றிக் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

## சமாதானப் பேச்சுக்களில் ஒளிவு மறைவில்லை!

### இந்தியத் தூதுவர் - சந்திரிகா, ரணிலுக்குப் பாராட்டு

(வொஷிங்ரன்)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அமைதி முயற்சிகள் பற்றி அனைத்துக்கட்சிகளும் இந்தியாவுக்குத் தெளிவுபடுத்தி வருவதாக, வொஷிங்ரனில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கான முன்னோடிக்கருத்தரங்கில் உரையாற்றிய அமெரிக்காவுக்கான இந்தியத்தூதுவர் மான்சிங் தெரிவித்தார்.

தற்போது விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் விடயத்தில்- ஆளும் கட்சியோ, எதிர்க்கட்சியோ ஒளிவு மறைவற்றுச் செயற்படுகின்றன. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சரி - இது தொடர்பான விபரங்களை இந்தியத் தலைவர்களுக்கு உடனுக்குடன் விளக்கமளித்து வருகின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வன்னிப்பகுதிகளில் ஒளிந்துள்ள குற்றவாளிகள் புலிகளால் செஞ்சிலுவை மூலம் ஒப்படைக்கப்படுவர்

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள கிரிமினல் குற்றவாளிகளை கைது செய்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் ஒப்படைக்கத் தயாராக உள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் குற்றச் செயல்களான கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, தீவைப்பு, மற்றும் சமூகச் சீரழிவுகளில் ஈடுபட்டு விட்டு - வன்னிப் பெருநிலப் பரப்பில் தலைமறைவு வாழ்வை நடத்தி வரும் குற்றவாளிகளால் யாழ். குடாநாட்டில் நீதி, நிர்வாகம் திறம்படச் செயற்பட முடியாதுள்ளது.

மேற்படி நிலைமையை விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பராவிடம், ஊர்காவற்றுறைச் சட்டத் தரணிகள் சங்கச் செயலாளர் பொன். பூலோகசிங்கம் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இதன்போதே - யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் குற்றச் செயல்களைப் புரிந்து விட்டு, வன்னிப் பெருநிலப்பரப்பில் தலைமறைவாகும் சந்தேக நபர்களை விடுதலைப் புலிகள் கைது செய்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றங்களுக்கு ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் உறுதியளித்துள்ளனர்.

மேலும், இவ்வாறான யாழ்ப்பாண மக்களின் துன்ப துயரமான விடயங்களை நீக்க விடுதலைப்புலிகள் மிகுந்த அக்கறையுடனும், பொறுப்புடனும் செயற்படுவார்கள் என விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கத்திடம் உறுதியளித்துள்ளார்.

## குடிநீர், தெருவிளக்கு வசதிகளில்லை அரியாலையில் கஷ்டப்படும் மக்கள்

அரியாலைப் பகுதிகளின பல இடங்களில் இதுவரை குடிநீர் வசதி, தெருமின்விளக்கு வசதி செய்து கொடுக்கப்படாததால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில் பெரும்பாலான வீடுகளில் உவர் நீர்க்கிணற்றையே மக்கள் கொண்டுள்ளனர். இதனால் அதிக தூரம் சென்றே அவர்கள் குடிநீர் பெற்றுக்கொள்கின்றனர்.

ஆசீர்வாதப்பர் வீதி, கனகரட்ணம் வீதி போன்ற இடங்களில் உள்ள சேதமாக்கப்பட்ட குடிநீர்க் குழாய்கள் திருத்திக் கொடுக்கப்படாததாலும்,

தற்போது திருடர் தொல்லைகள் அதிகரித்துள்ளதால், இரவுவேளைகளில் தெரு மின்விளக்கு வசதி பல இடங்களில் செய்து கொடுக்கப்படாததாலும் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (55)

## விமானப்படை ஒத்திகையால் மின்னேரியாவில் பதற்றம்

மின்னேரியாவில் விமானப்படையினர் மேற்கொண்ட ஒத்திகையால் அப்பகுதி மக்கள் விமான விபத்து ஏற்பட்டு விட்டதாகப் பதற்றமடைந்தனர்.

நேற்று முன்தினம் மின்னேரியாப் பகுதியில் திடீரென விமானப்படை விமானங்களும், ஹெலிகளும் பல பக்கங்களிலும் பறந்து திரிந்தன.

இதையடுத்து, விமானம் வீழ்ந்து விட்டதாகக் கருதிய அப்பகுதி மக்கள் பரபரப்படைந்து சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் மின்னேரியா நோக்கி விரைந்தனர்.

இறுதியில்தான் மின்னேரியா விமானப்படைத்தளத்தில் உள்ள விமானப்படையினர் ஒத்திகையில் ஈடுபட்டது தெரிய வந்தது.

## 30 இளைஞர் யுவதிகள் ஹோமகமவுக்கு சுற்றுலா

தென்பகுதிக்கான நட்புறவுச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு, ஹோமகம பிரதேச இணையங்களின் சம்மேளன ஏற்பாட்டில் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 இளைஞர்கள், யுவதிகள் ஹோமகம செல்கின்றனர்.

5 நாட்கள் இடம்பெறவுள்ள சுற்றுலாவில் - சிரமதானம், கல்விச் சுற்றுலா, இளமையின் புத்தாண்டு இசை நிகழ்ச்சி மற்றும் கலாசார நிகழ்வுகள், அதிகாரப்பரவலாக்கம் தொடர்பான கருத்துப்பரிமாற்றங்கள் என்பன இடம்பெறவுள்ளன.

'25 ஆம்திகதி தொடக்கம் 29 ஆம் திகதிவரை ஹோமகமவில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுகள் முடிவுற்றதும் அங்கிருந்து தென்பகுதிக் குழுவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

(சு)



## குறைதீர் மன்றம்

யாழ்.செயலகக் கட்டடத் தொகுதியில் இயங்கிவரும் அரச தகவல் தொடர்புமையம் சீரான முறையில் இயங்குவதில்லை, கூடுதலான நேரம் இந்நிலையம் பூட்டியே காணப்படுகின்றது. வெளிமாவட்டங்களைப் பொறுத்தவரையில் செய்தியாளர்களும் பத்திரிகைகளுக்கும் பெரும் பணிபுரிவது தகவல் தொடர்பு நிலையமே. அப்படியிருக்க, யாழ். மாவட்ட தகவல் தொடர்புநிலையம் மட்டும் ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றது? இதற்குச் சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்பு கொண்டு விளக்கம் பெற்றுத்தருவீர்களா?

கே.மதிவேணி.

நமது ஈழநாடு

தங்களுடைய பிரச்சினை தொடர்பாக யாழ்ப்பாண தகவல் தொடர்புத் திணைக்கள அதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது,

தகவல் தொடர்பு திணைக்களத்தில் ஈ-மெயில் ஒழுங்காக வேலை செய்வதில்லையென்றும், தொலைபேசி, பக்ஸ் போன்றவற்றைப் பாவனைக்கு வழங்குவதற்குத் தனக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.


மேலும் - இப்பிரிவை நிர்வகிப்பதற்குரிய பூரண அனுமதி தனக்கு வழங்கப்படவில்லையென்றும் இதில் பணியாற்றியதற்கு ஒருமாதம்கூட தனக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

# சிரியாவை நோக்கித் திரும்பியுள்ள அமெரிக்காவின் உள்நோக்கம் என்ன?


சதாம் ஹுசைன் - எங்கே போனார்?

ஈராக்கிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவரான பேராசிரியர் மொஹமட் அல்சாரியின் அரசியல் நாகரிகத்தை இலங்கை அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, எல்லா அரசியல்வாதிகளும் கற்றுக்கொள்ள வேண்டும். அவரது உறுதியும், பதவியை ராஜினாமா செய்ததற்கான காரணமும் வரலாற்றில் நிரந்தரமானதாக அமையும். அவ்வாறே - ஈராக்கிய மக்களின் அமெரிக்காவுக்கெதிரான உணர்வுகள்- சதாம் ஆட்சி வீழ்ந்த பின்பும் மாறவில்லை என்பதனையும் அது காட்டிநிற்கிறது. சதாமுக்கு எதிரான ஷியா பிரிவினர்கூட அமெரிக்காவை எதிரியாகவே கருதுவதுடன், ஆட்சி மாற்றத்தைத் தமது விருப்பத்திற்கேற்ப உருவாக்கவும் விரும்புகின்றனர். ஆனால், சதாம் எங்கே என்ற கேள்வியுடன், இலட்சக்கணக்கான படைகளுடன் எங்கே மறைந்திருக்கின்றார் என்பதே புதிய பிரச்சினையாக உணரப்படுகின்றது. வெறும் ஆயிரக்கணக்கான ஈராக்கியப் படைகள்தான் சரணடைந்துள்ளன என்பதை அமெரிக்க ஆளும் வர்க்கம் கருத்திற்கொள்ளத் தவறுமாயின், சிரியா மீதான தாக்குதல் வேகமாகச் சாத்தியப்படலாம். இவ்வாரம் சிரியா மீதான அமெரிக்கப் போக்கை நோக்குவோம்.

அமெரிக்க ஆளும் வர்க்கம் இஸ்லாமிய நாடுகளைத் துடைத்தெடுக்கும் முயற்சிக்கு முழு ஆயத்தத்தினையும் திட்டமிட்டு நகர்த்திவருகின்றது. ஈராக்கின் ஆட்சி -அமெரிக்க விஸ்தரிப்புக் கொள்கைக்குத் தடையாக அமைந்ததுடன், ஆபத்தாயும் விளங்கியது. சதாமின் சகாப்தம் என்பது அமெரிக்காவின் அபாயமான சகாப்தமாக விளங்கியது. அதனால், அச்சகாப்தத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதன் வாயிலாக உடனடியான நெருக்கடியிலிருந்து அமெரிக்கா தப்பிவிட்டது என்பதுடன், விஸ்தரிப்புவாதத்திற்கு இருந்த தடையும் அகன்றுவிட்டது. ஆனால், சதாம் அழிக்கப்படவில்லை என்பதனையே அமெரிக்கா தற்போது உணரத் தொடங்கிவிட்டது. ஈராக்கைப் போன்று சிரியாவும் இரசாயன ஆயுதங்களைத் தயாரித்துள்ளதனைத் தாம் கடந்த ஒரு வருடமாக அவதானித்து வந்ததாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட ரம்ஸ்பீல்ட் - பத்திரிகைகளுக்கு அளிதத அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.


ரொனி பிளேயர், புஷ் - வெற்றிச் சிரிப்பா?

ஆனால், அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளரான கொலின் பவல் - சிரியாவைத் தாக்கும் எண்ணம் உடனடியாக இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளார். அப்படியாயின் காலப்போக்கில் தாக்கலாம் என்பதுடன், ஈராக் கொள்கையில் பின்பற்றிய அதே கொள்கையைத்தான் சிரியா தொடர்பாகவும் அமெரிக்கா பின்பற்றுகின்றது என்பது தெளிவாகின்றது. ஆனாலும்- பவல் மெத்தனப் போக்குடையவராகவும், ரம்ஸ் பீல்ட் தீவிரப்போக்குடையவராகவும் காட்டிக்கொண்டிருந்தமை அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் தந்திரமான அணுகுமுறையாகும்.

அமெரிக்கர்கள் ஏன் சிரியாவை அடுத்ததாக இலக்குவைத்துள்ளார்கள என்பது கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயமாகும். சதாமும் அவரது புதல்வர்களும் சிரியாவுக்குள் மறைந்து இருக்கலாமென நம்பப்படுகின்றது. ஈராக்குக்கான ஐ.நா.தூதுவரும் சிரியாவுக்குச் சென்றிருந்தார் என்பதால், அமெரிக்கா - சிரியாவைத் தாக்குவது பற்றிய நோக்கத்தினைக் கொண்டிருக்கின்றது எனக் கருதவும் வாய்ப்புண்டு.

அவற்றுக்கு மேலான சில காரணங்களும் இருக்கலாமென எதிர்பார்ககப்படுகின்றது. குறிப்பாக, மேற்காசியாவின் எண்ணெய் வளத்தினைச் சுரண்டுவதன் வாயிலான பொருளாதார இலாபத்தினைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது முக்கிய நோக்கங்களில் ஒன்றாக அமையலாம். ஈராக் மீதான பொருளாதாரத் தடையை விதிக்க வைத்த அமெரிக்கா, தற்போது அப்பொருளாதாரத்தடையை நீக்குமாறு ஐ.நா. சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அதிலும் - ஈராக் எண்ணெயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பினை உடனடியாக உருவாக்குவதுடன், அதனால், அதிக இலாபத்தினைப் பெற்றுக்கொள்ளலாமெனவும் அமெரிக்கா கருதுகின்றது. அதனைவிட, அமெரிக்கப் பொருளாதாரத்திற்குக் கைகொடுப்பதும், அபரிமிதமான இலாபத்தை வழங்கக்கூடியதுமாக ஈராக்கின் ஆட்சி மாற்றம் அமையலாம். ஏனெனில், ஈராக்கின் ஆட்சிமாற்றத்தில் ஜனநாயகம் பிரதான அமெரிக்கச் சுலோகமாகவுள்ளது. ஜனநாயகம் ஈராக்கில் செழிப்படைந்தால், அமெரிக்கமயமாக்கம் (உலகமயமாக்கம்) செழிப்படையும். அதனால், பொருளாதாரரீதியில் அமெரிக்கா சுரண்டலைச் சாதகமானதாக உருவாக்கிக் கொள்ளலாம். இது யூரோலாந்துப் பொருளாதார வலயத்தையும் நெருக்கடிக்குள்ளாக்குவதுடன், தொடர்ந்து நடக்கும் அமெரிக்கப் பொருளாதார வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தி- அதனை எழுச்சியடையச் செய்யும் என அமெரிக்கா கருதுகின்றது. அவ்வாறு ஈராக் மட்டுமன்றி, இஸ்லாமிய நாடுகள் அனைத்தையும் ஆட்சிமாற்றத்துக்குள் தள்ளிவிட்டு, அமெரிக்க ஆதிக்கத்தினை அரசியல் ரீதியில் மட்டுமன்றி பொருளாதார, கலாசார, அடிப்படையிலும் இலகுவாக ஏற்படுத்தலாம். அதுவே அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் நோக்கமாக உள்ளது. அதில் மிகப்பலமான எதிரி மேற்காசியாவில் சதாம் என்பதும், அவரது சகாப்தம் முடிந்ததால் சிரியா, ஈரான் வரிசைகள் தொடரலாம். குவைத் 1991 ஆம் ஆண்டு போரிலேயே அமெரிக்க மயப்படுத்தலுக்குள் அகப்பட்டுவிட்டது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

20 ஆம் நூற்றாண்டுவரை - போர் பொருளாதாரத்தை அழித்துவிடும் என்று ஐரோப்பிய மரபில் வந்த சிந்தனையாளர்களால் போதிக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்று போர் ஒரு பொருளாதார எழுச்சியை ஏற்படுத்தலாம் என்பதுடன், அரசியல் அடிபணிதலைப் பொருளாதாரக் குறிகாட்டியால் சாத்தியப்படாதபோது, போரால் சாத்தியப்படுத்தலாம் என்ற

## கே.ரீ.கணேசலிங்கம்

சிந்தனையை அமெரிக்க ஆளும் வர்க்கம் உலகத்தின் மீது திணித்து வருகின்றது. இது அமெரிக்காவுக்குரிய சிந்தனை என்பதுடன், அமெரிக்காவுக்கே பொருத்தமான சிந்தனையுமாகும். இது ஒரு புதிய சகாப்தம் என்பது அரசியல் அறிஞர்கள் பலரால் சுட்டிக்காட்டப்படும் அம்சமாகும். இத்தகைய போர் - அமெரிக்க மண்ணில் தொடர்ந்து நிகழாதவரையும் மேற்படி கருத்து அமெரிக்கர்களுக்குச் சாதகமானதாக அமையும்.

இரண்டாவது காரணமாக விளங்கக்கூடியது, பலமான யூத இராச்சியத்தை மேற்காசியாவில் நிறுவுவதாக அமையலாம். அவ்வகையான நோக்கத்துக்கு ஈராக் மட்டுமல்ல, சிரியாவும் ஏனைய மேற்காசிய அரசுகளுமே அச்சுறுத்தலாக உள்ளன. அமெரிக்கர்கள்- யூதர்களின் கைப்பொம்மைகளாகவே உள்ளனர் என்ற கருத்து அமெரிக்க முற்போக்குப் புத்திஜீவிகளிடம் காணப்படுகின்றது. ஏறக்குறைய அமெரிக்க அரசியல் தலைவர்களும், அரசியல் கட்சிகளும் - அமெரிக்காவில் வாழும் யூதர்களின் உதவியுடனேயே கட்சி நடவடிக்கைகளையும், ஆட்சிமாற்றங்களையும் மேற்கொள்கின்றனர். பெரும் பொருளாதார வளமுடைய யூதர்கள் - அமெரிக்காவையே ஆளும் பலமுடையவர்களாக விளங்குகின்றனர். அவர்களது நலனும், அமெரிக்கர்களது நலனும் ஒன்று சேர்ந்த வகையிலேயே மேற்காசியக் கொள்கை வகுப்பு நிகழ்கின்றது. எனவே, யூத இராச்சியத்தைப் பெரிதாக்குவதும், பாதுகாப்பதும் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் அரசியல் பலத்தைத் தீர்மானிக்கும் விடயமாக இருப்பதனால், அத்தகைய கருத்து, சாத்தியப்படும் வாய்ப்புக் காணப்படலாம். இரண்டு தடவை நிகழ்ந்த பாரிய யுத்தங்களிலும் இஸ்ரேல் பங்கெடுக்கவில்லை என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய அம்சமாகும்.


சிரிய ஜனாதிபதி அசாத்

எனவே, அமெரிக்கர்களின் பிரதான நோக்கம் மேற்காசியா முழுவதிலும் ஆட்சிமாற்றத்தைச் சாத்தியமாக்கி, அதனூடாகப் பொருளாதாரச் சுரண்டலையும், ஆளுகையையும் சாத்தியப்படுத்துவதாகும். பெருமளவுக்கு யூத இனவாதத்திலிருந்து உருவான உலகமயமாக்கச் சிந்தனையின் எதிரொலி அரசியற்போர் மேற்காசியாவில் மையங்கொண்டுள்ளது. அப்பிராந்தியம் அமெரிக்க ஆதிக்கத்துக்குள் வரும்வரை, ஏனைய பிராந்தியங்களில் அமைதி, சமாதானம், மனித உரிமை, பொருளாதார மீளளிப்பு என்ற அம்சங்கள் பாதுகாக்கப்படும். அல்லது பேசப்படும். இதனை உலக அரசுகளின் தலைவர்கள் கைகட்டிக் கண்டனம் தெரிவிப்பதோடு நிறுத்திக் கொள்வார்களாயின், காலப்போக்கில் அமெரிக்காவின் கட்டளைக்கும், சூறையாடலுக்கும் அகப்படவே வேண்டிவரும். ★

# புதிதாக முன்பள்ளிகளை ஆரம்பிக்க மேம்பாட்டுக்கழக அனுமதி அவசியம்!

யாழ்.மாவட்டத்தில் முன்பள்ளிச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. வேதனம் வழங்கப்படாத முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மூலம் வேதனம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் - முன்பள்ளி செயற்திட்டக் கல்வியில் ஒன்றிணைவுத் தன்மையிலிருந்து விலகிச்செல்கின்ற நிலையினால், புதிய முன்பள்ளிகள் தேவைப்படும்போது, முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்துடன் தொடர்புகொண்டு, தமது அனுமதியுடன் அமைத்து, கல்விச் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் கேட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் முன்பள்ளிச் செயற்பாடுகளை முன்னெடுக்க முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம்- கொத்தணி, பிரதேச மட்டம், வலய மட்டத்தில் - முன்பள்ளி பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து செயற்பாட்டுக் குழுக்களை அமைத்துள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், கலைத்திட்டங்கள் என்பன, எதிர்காலக் கல்வித் தேவைக்கேற்ற வகையில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலர் பிரிவுகளுக்கு முன்பள்ளி செயற்திட்டத்தினை மேற்பார்வை செய்ய - ஒவ்வொரு இணைப்பாளர் நியமிக்கப்பட்டு செயற்பட்டுவருகின்றார்.

வலயமட்ட செயற்குழுவிற்கு வலயமுன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தலைவராக இருந்து செயற்பட்டு வருகின்றனர். இச் செயற்திட்டத்திற்கு யாழ். மாவட்டத்தில் துறைசார்ந்தவர்களும், சர்வதேச, உள்ளூர் நிறுவனங்களும், பொது அமைப்புக்களும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கி முன்பள்ளி கல்வி செயற்திட்டத்தினை மேம்படுத்துவதற்கு உதவுமாறு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் கேட்டுள்ளது.

# நெல்லியடி பிரதான வீதி மோசமான நிலையில்!

நெல்லியடி சந்திப் பகுதியில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதி மிக மோசமான நிலையில் சேதமடைந்துள்ளது. இதனால், வாகனங்களில் செல்வோர் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதுடன் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்களும் அதிகரித்துள்ளன.

இதேவேளை, பல வருடங்களாக திருத்தப்படாதுள்ள நெல்லியடி பஸ் நிலைய சுற்றுவீதியும் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. இதனால், பொதுமக்கள் மிகுந்த சிரமங்களை அனுபவிக்கின்றனர். இந்த பஸ் நிலையப் பகுதி பருத்தித்துறை போக்குவரத்துச் சபை டிப்போவுக்குச் சொந்தமானது. இது தொடர்பாக அவர்களுக்குச் சுட்டிக்காட்டியும், தம்மிடம் போதிய நிதி இல்லை என்று காரணம் கூறப்பட்டுவருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (13)

## 12 ஆயிரம் பொலிஸாருக்கு வெற்றிடம்

நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பணியாற்றுவதற்கு பன்னிரெண்டாயிரம் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு வெற்றிடமாக இருப்பதாக பொலிஸ் மா அதிபர் ஆனந்த ராஜா தெரிவித்தார்.

இதனால் பொலிஸ் நிலையங்களில் பணியாற்றுவதற்கென விரைவில் பொலிஸார் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புத்தரின் பெயரால் படத்துக்கு அமெரிக்காவில் சிறப்பு விருது

'புத்தரின் பெயரால்' என்ற படம் அமெரிக்காவில் இடம்பெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவொன்றில் சிறப்பு விருதொன்றைப் பெற்றுள்ளது.

ஆறரைக்கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருந்தது.

இலங்கை இனப்பிரச்சினையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட இந்தத் திரைப்படத்திற்கு சிறந்த வெளிநாட்டுத் திரைப்படம் என்ற விருது கிடைத்துள்ளது.

# மேதினப் பேரணியை ஐ.தே.மு நடத்தாதாம்

தொழிலாளர் தினமான மே தினத்தையொட்டி இம்முறை ஐக்கிய தேசிய முன்னணி கொழும்பில் பெரும் ஊர்வலங்களையோ, கூட்டங்களையோ நடத்தமாட்டாது என அறிவித்துள்ளது.

இதற்குப் பதிலாக அன்றைய தினம் தொழிலாளர் நலன்பேண நிகழ்வுகள் மற்றும் வர்த்தக சந்தை என்பவற்றை ஏற்பாடு செய்யவுள்ளதாக ஐக்கியதேசிய முன்னணி கட்சி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(01)

# மு.க.ஸ்ராலின் மீது கொலைமுயற்சி வழக்கு

(சென்னை)

தமிழக அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தி.மு.கவின் இளைஞரணிச் செயலாளரும், சட்டச்சபை உறுப்பினருமான மு.க.ஸ்ராலின் மீது தமிழகப் பொலிஸார் கொலைமுயற்சிக் குற்றச்சாட்டுச் சுமத்தியுள்ளனர்.

கைது செய்ய வந்த பொலிஸாரைத் தாக்கி, கொலை செய்ய முற்பட்டதாக ஸ்ராலீன் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. தற்போது ஸ்ராலின் கடலூர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

# ஈராக்கில் அமெ. - பிரிட்டிஷ் அதிகாரிகளின் குத்துக்கரணத் தகவல்கள் அம்பலமானது

ஈராக் போர் முடிவடைந்துவிட்டதாக மேற்குலகச் செய்தி ஊடகங்கள் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு வருகின்றபோதிலும், அவை எந்தளவு உண்மையான தகவல்களைத் தருகின்றன என்பது புரியாத நிலையிலேயே இருப்பதாக, பி.பி.சி. நிறுவனம் ஒத்துக்கொண்டுள்ளது.

போர் உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் அமெரிக்க - பிரிட்டிஷ் அதிகாரிகளின் ஒன்றுக்கு ஒன்று முரணான

போர்க்கைதிகளின் விடுதலை



தகவல்களை வெளியிட்டதை, பி.பி.சியின் **News Online** சுட்டிக்காட்டியுள்ளது.

போர் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், மார்ச் 20 ஆம் திகதி அமெரிக்க - பிரிட்டிஷ் அதிகாரிகள் - ஈராக், ஸ்கட் ஏவுகணைகளை குவைத் மீது செலுத்தியுள்ளதாக அறிவித்தனர். ஸ்கட் ரக ஏவுகணைகளை ஈராக் வைத்திருப்பது, ஐ.நாவினால் ஏற்கனவே தடைசெய்யப்பட்ட நிலையில், இந்த அறிவிப்பானது வியப்புடன் நோக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டிய பி.பி.சி. **Online**, மூன்று நாட்களின்பின் ஈராக் ஸ்கட் ஏவுகணை எதையும் செலுத்தவில்லை என அமெரிக்காவின் இராணுவ அதிகாரி ஜெனரல் ஸ்ரான்லி மக்கிரிஸ்டல் அறிவித்ததையும் சுட்டிக்காட்டுகின்றது.

இதேபோன்று, துறைமுக நகரான உம் - கசார் வீழ்ச்சியுற்றதாக, போர் ஆரம்பித்தது முதல் ஒருவாரமாக அடிக்கடி கூறப்பட்டதாயினும், அங்கு நீண்டநாட்களாகப் போர் நடைபெற்றதே உண்மையாகும்.

பஸ்ரா நகரில், ஷியா முஸ்லிம்கள் ஈராக்



துயரம் கடக்குமா...?

கியப் படைகளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டனர் என, மார்ச் 25 ஆம் திகதி பிரிட்டிஷ் இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் கூறினர்.

பிரிட்டனின் பிரதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பீட்டர் வோல், கிளர்ச்சி நடைபெறுவதால் பஸ்ராவை கைப்பற்றுவது பிரிட்டிஷ் படைகளுக்குச் சுலபமாக மாறிவிட்டது என்று மறுநாள் அறிவித்தார். ஆனால், பஸ்ராவில் எத்தகைய கிளர்ச்சியும் இறுதிவரை நிகழவில்லை. பஸ்ராவும் பக்தாத்தின் வீழ்ச்சிக்கு ஒரு சில தினங்களுக்கு முன்பே வீழ்ச்சியுற்றது. அதாவது, ஈராக் போரின் இறுதிக்கட்டத்தில்தான்.

மார்ச் 26 ஆம் திகதி, ஈராக்கின் பெரிய இராணுவ டாங்கி அணி ஒன்று தெற்கு நோக்கி நகர்வதாக பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், பின்னர் 14 ஈராக்கிய வாகனங்கள் மட்டுமே ரடாரில் காணப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பக்தாத் சந்தை மீது அமெரிக்க ஏவுகணைகள் இரண்டு வந்து வீழ்ந்ததில், ஏராளமான ஈராக்கியர்கள் பலியானார்கள். ஆனால், அமெரிக்க அதிகாரிகள் இதை நிராகரித்து, ஈராக்கியக் குடியிருப்புப் பகுதியினுள் ஏவுகணைத்தளம் அமைந்திருந்ததை அவதானித்த அமெரிக்க விமானிகள், அவற்றின் மீதே தாக்குதல் நடத்தியதாகக் கூறினர். சந்தையைத் தாம் இலக்கு வைக்கவில்லை என பென்ரகன் அறிவித்தது. ஆனால், அமெரிக்க அதிகாரி மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி மக்கிரிஸ்டல், சந்தையில் ஏற்பட்ட அனர்த்தத்துக்கு அமெரிக்க ஏவுகணைதான் பொறுப்பு என்பதை ஏற்க மறுத்து, ஈராக்கியப் படைகள் ஏவிய விமான எதிர்ப்பு ஏவுகணை ஏதும் தரையில் வந்து வீழ்த்திருக்கலாம் என்றார். ஆனால், அச்சமயத்தில் பக்தாத் அருகே எந்த விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் செலுத்தப்பட்ட ஒலி தமக்கு கேட்கவில்லை என, பக்தாத்திலிருந்த செய்தியாளர்கள் கூறியிருந்தனர். அமெரிக்க அதிகாரிகளின் கூற்றையே பிரிட்டிஷ் பாதுகாப்பு செயலர் ஜியவ் ஹுவ்வும் தெரிவித்தார்.

இடிபாட்டுச் சேதங்களை ஈராக்கியப் படையினர் உடனடியாக அகற்றியமை, தமது ஏவுகணையே இதற்குக் காரணம் என்பதை மக்கள் அறிந்து கொள்வதைத் தடுக்கவே எனவும் அவர் கூறினார்.

மார்ச் 27 இல், இரசாயன ஆயுதங்கள் ஈராக்கில் கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறினார். பின் ஏப்ரல் முதலாம் திகதி, எந்த இரசாயன ஆயுதங்களும் ஈராக்கில் இல்லை என அமெரிக்க - பிரிட்டிஷ் ஜெனரல் வின்சன்ட் புறூக்ஸ் கூறினார்.

மார்ச் 30 இல், தென் ஈராக்கில் ஈராக்கிய



வீதிதோறும் சோதனை



சிதைவுகள்

இராணுவ உயரதிகாரியை கைது செய்ததாக பிரிட்டிஷ் படைகள் அறிவித்தன. ஆனால், பின்னர் அவர் சாதாரண ஈராக்கிய சிப்பாயே, அவரை அதிகாரியென தவறாக புரிந்துகொண்டுவிட்டோம் என, பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மார்ச் 31 இல், ஈராக்கியப் பொதுமக்கள் சென்ற வானை அமெரிக்கப் படைகள் தாக்கியதில், ஏழு அப்பாவிகள் பலியானபோது



சதாம் - மேலிருந்து கீழ்

அவர்கள் தாக்குதல் நடத்த முற்பட்டபோதே, திருப்பித் தாக்கினோம் என்றனர் அமெரிக்கப் படை அதிகாரிகள். ஆனால், அப்பாவிகளே சுடப்பட்டதாக பின்னர் வொஷிங்ரன் போஸ்ட் தினசரி செய்தி வெளியிட்டது.

ஏப்ரல் 3 இல், தடைசெய்யப்பட்ட கிளஸ்டர் குண்டுகளை பிரிட்டிஷ் விமானப்படை வீசியதாக ஈராக் குற்றஞ்சாட்டியபோது, அதை மறுத்த பிரிட்டிஷ் அதிகாரிகள், பின்னர் மறுநாள் போரில் கிளஸ்டர் குண்டின் பாவனை அத்தியாவசியமானது என்பதாலேயே பாவித்தோம். மக்கள் குடியிருப்புக்களில் உபயோகிக்கவில்லை. பாலைவனப் பகுதிகளிலேயே பாவித்தோம் என்ற அறிவித்தல்களை விடுத்தனர் என - ஈராக் போர் சம்பந்தமாக வெளியான குத்துக்கரணச் செய்திகளை பி.பி.சி **Online** பகிரங்கப்படுத்தியுள்ளது.

**- விதுஷன்.**

# ஈராக்கில் ஆயுத சோதனைக்கு ஐ.நா. குழு உதவி வழங்கும்!

## மற்றுமோர் ஈராக்கியப் பிரமுகரும் கைது

ஈராக்கிலுள்ள பேரழிவு ஆயுதங்களைத் தேடும் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளுக்கு, தனது குழுவி



சோதனையில் கண்காணிப்புக் குழு

னர் உதவி வழங்கவுள்ளதாக ஐ.நா. வின் ஆயுதக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ், உறுதியளித்துள்ளார்.

இதுவரை எந்தப் பேரழிவு ஆயுதங்களும் ஈராக்கினுள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், உறுதியாகச்சொல்ல இன்னும் காலம் இருக்கின்றது என்கிறார் பிளிக்ஸ்.

இதேவேளை - அமெரிக்காவால் தேடப்பட்ட மற்றுமோர் ஈராக்கியத் தலைவர் அமெரிக்கப் படைகளால் பிடிக்கப்பட்டுள்ளார். சதாமின் உறவினரும், உளவுத்துறையின் முன்னாள் தலைவருமான பார்சான் அல்- திக்ரிதி பக்தாத்தில் ஈராக்கியரால் காட்டிக்கொடுக்கப்பட்டதில் அமெரிக்க விசேட படையினரிடம் சிக்கினார்.

இவரின் கைது மூலம் ஈராக்கின் முன்னாள் ஆட்சித் தலைவர்களின் இன்றைய நிலை குறித்து அறிந்து கொள்ள முடியும் என, அமெரிக்க பிரிகேடியர் ஜெனரல் வின்செண்ட் புறூக்ஸ் தெரிவித்துள்ளார்.

# பிரான்சை நெருக்குவதற்கு அமெரிக்கா இராஜீக முயற்சி

ஈராக் போரில் தனக்கு ஆதரவு வழங்காத பிரான்சை, அமெரிக்கா இராஜதந்திர ரீதியில் நெருக்குதலுக்குள்ளாக்கும் முயற்சி எடுக்கும் அதே சமயத்தில், அமெரிக்காவுடனான தனது உறவைத் தொடர்ந்து பேணும் இராஜீக முயற்சிகளில் பிரான்ஸ் இறங்கியுள்ளது.

இதன் ஒரு பகுதியாக பிரான்ஸின் ஜனாதிபதி ஷிராக் அமெரிக்கா சென்றுள்ளார். புஷ்ஷுடன் நடைபெற்ற பேச்சுக்கள் திருப்தி அளித்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஈராக் மீதான போரை- பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் பகிரங்கமாகக் கண்டித்து வந்தமை தெரிந்ததே.

உலகவலம்

# அவசர உணவு, மருத்துவ உதவிகள் அமெரிக்கப் படைகளால் தாமதம்

ஈராக்கிற்கான ஐ.நா உணவு உதவிகள் பக்தாத்தை வந்தடைந்தபோதிலும், அவற்றை விநியோகிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு லட்சம் மக்களுக்கு - ஒரு மாதத்துக்குத் தேவையான 1400 மெட்ரிக் தொன் கோதுமை மாவுடன், 50 லொறிகள் ஜோர்டான் எல்லையூடாக ஈராக்கினுள் வந்துள்ளன.

இந்த உதவிப்பொருட்கள் பக்தாத்தின் புறநகர்ப் பகுதியில் உள்ள களஞ்சியம் ஒன்றில் சேமித்து வைக்க முன்பாக, அப்பகுதியில் ஈராக்கியக் கொள்ளையர்களின் பிரசன்னம் அகற்றப்படவேண்டிய நிலை காணப்படுகிறது. பக்தாத்தின் பாதுகாப்பு நிலை குறித்து ஐ.நாவின் உலக உணவுத்திட்ட அதிகாரிகள் நேரில் ஆராய எடுத்த முயற்சியை அமெரிக்கப் படைகள் தடுத்து நிறுத்தியுள்ளன. இதேசமயம் மேலும் 100 லொறிகள் துருக்கியூடாக ஈராக் வந்துள்ளன. அமெரிக்க அதிகாரிகளின் அனுமதியை எதிர்பார்த்து உலக உணவுத்திட்டத்தின் 30 அதிகாரிகள் சைப்பிரஸில் காத்திருக்கின்றனர். விநியோகத் தாமதங்கள், ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக உருவெடுக்கலாம் என ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.



இதேசமயம் - 40 ஆயிரம் மக்களுக்கான மருத்துவ உபகரணங்களுடன் வடஈராக்கின் இர்பில் நகருக்கு வரவிருந்த சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் விமானத்தையும், ஈராக்கினுள் வராது அமெரிக்க இராணுவம் தடுத்துள்ளது. இப்பகுதி, பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பின்பே உள்நுழைய அனுமதி தரப்படும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐ.நாவின் கணிப்பின்படி, ஈராக்கின் அரைப்பகுதி மக்களுக்குப் போதுமான ஒரு மாத உணவே தற்போது ஈராக்கில் கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக்கின் வீழ்ச்சியால் கதிகலங்கியுள்ள அரபுலகம்

## சவுதியில் உயர்மட்டக் கூட்டம் நடத்த முடிவு

ஈராக்கின் வீழ்ச்சி, அரபுலகில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தலாம் என ஆராயும்பொருட்டு ஈராக்கின் அயல் நாட்டுத் தலைவர்கள் சவுதி அரேபியாவில் கூடவுள்ளனர்.

சவுதி அரேபியாவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டம், ஈராக் குறித்து அமெரிக்கா சில முடிவுகளை மேற்கொள்ளவுள்ள சமயத்தில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் அயல்நாடுகள் சதாமுடன் நல்ல உறவைக் கொண்டிராவிட்டாலும், ஈராக்கின் வீழ்ச்சி தம் நாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என அரபு நாடுகள் அஞ்சுகின்றன.

சவுதி கூட்டத்தின்போது, தற்போது அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் சிரியாவுக்கு அரபுலகின் கூட்டு ஆதரவு வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தியாக தீபம் அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நினைவுநாள்!

## இன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது

தியாக தீபம் அன்னை பூபதியின் பதினைந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வுகள், இன்று வட-கிழக்குப் பிரதேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

வட-கிழக்கின் பல மாவட்டங்களிலும் விசேட நிகழ்வுகளும் நினைவுக் கூட்டங்களும் இடம்பெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் - பொது அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து, நல்லூர் கந்தசாமி ஆலய முன்றலில் காலை 9 மணிக்கு அடையாள உண்ணாவிரதம் ஒன்றினை நடத்தவுள்ளன.

மாலை நினைவுக் கூட்டம் இடம்பெறுவதுடன், பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை வடமராட்சியில் - தியாக தீபம் அன்னை பூபதியின் 15 ஆவது ஆண்டு நிறைவு நாளையொட்டிய அடையாள உண்ணாவிரத நிகழ்வு, இன்று காலை பருத்தித்துறை சிவன்கோவில் வீதியில் நடைபெறவுள்ளது.

வர்த்தகர் சங்கத் தலைவர் குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பொதுச்சுடரை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றுவார். தேசியக்கொடியை விடுதலைப் புலிகள் உறுப்பினர் லோறன்ஸ் ஏற்றிவைப்பார்.

ஈகச்சுடரினை மாவீரர் சிட்டுவின் தாயாரும், மகளிர் அரசியற்துறையைச் சேர்ந்த ஜமுனாவும் ஏற்றிவைப்பர். இரவு 7 மணிக்கு நினைவுக்கூட்டமும் அதையடுத்து இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (லி,9)



மிற்சுயி ஸ்தாபனத்தின் புதிய படைப்பு
ஹினோடே சிமெந்து
(சி.783)
வேலைக்கு முந்தும் - ஜப்பானிய பெயர் !

# கிழக்கு மாகாணத்தை உடனடியாக பிரிக்குக!

## மூதூரில் செய்தியாளர் மத்தியில் அதாவுல்லா

முஸ்லிம்களை வஞ்சிக்கும் நிகழ்வும், கிழக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றும் சதியும் தொடரப்போகின்றது என்பதையே, மூதூர் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. எனவே, இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கிலிருந்து, கிழக்கு மாகாணம் உடனடியாகப் பிரிக்கப்பட்டு தனி ஆளுநரின் கீழ் கொண்டுவரப்படுவதுடன், கிழக்கில் வாழும் மூன்று சமூகங்களையும் பாதுகாக்கப்படும் வலயமாகவும் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு நேற்று மாலை அக்கரைப்பற்று, ஆயிஷா பாலிகா வித்தியாலயத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், நெடுஞ்சாலைகள், போக்குவரத்துப் பிரதி அமைச்சரும், அஷ்ரப் காங்கிரஸ் கட்சியின் தவிசாளருமான ஏ.என்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

அமைச்சர் அதாவுல்லா, மூதூர் சம்பவங்கள் தொடர்பான தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையில், இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினார்.

அமைச்சர் அதாவுல்லா தொடர்ந்து அங்கு கருத்து வெளியிடுகையில்,

வடக்கையும் கிழக்கையும் தனித்தனியே பிரிப்பதனால்தான் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வழிபிறக்கும்.

எனவே, கிழக்கைத் தனியே பிரிப்பதற்கு பிரதமரும், ஜனாதிபதியும் உடனடியாக ஆவன செய்யவேண்டும்.

மூதூரில் முஸ்லிம்களுக்கு நிகழ்ந்துள்ள அனர்த்தங்களுக்குத் தீர்வுகாணவன்றி, தம்மை அவமதித்ததற்குத் தீர்வு காணவே பிரதமர் அங்கு வரவேண்டுமென, அமைச்சர் ஹக்கீம் அடம்பிடித்துக் கொண்டிருக்கிறார் என்றும் கூறினார். (08)

# பிரதேசசபையின் தலைவர் அம்பாறையில் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பு பிரதேசசபைத் தலைவர் மாரிமுத்து இராசலிங்கம் (வயது-41), இனந்தெரியாத நபர்களினால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 11.45 மணியளவில், அக்கரைப்பற்று சிலம்பரி வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சுட்டுக்கொல்லப்பட்ட பிரதேசசபைத் தலைவர், ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்க ஆரம்பகால உறுப்பினராகவும், மத்திய குழு உறுப்பினராகவும் இருந்தவரென்றும், பின்னர் ஈ.பி.டி.பியுடன் இணைந்து கொண்டவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வாழ்த்துகின்றோம்
சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின்
96 ஆவது ஆண்டு நினைவு விழா இன்று நடைபெறுவதையிட்டு
மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர் - எம்.கே.யோகரட்ணம் குடும்பம்,
புலோலி மத்தி.
(சி-856)

BIT
Bachelor of Information Technology
University of Colombo School of Computing

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மேற்படி தகவல்
தொழில்நுட்பமானி பட்டக்கல்விக்கான, கல்வியாண்டு
2003/2004 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவுத் திகதி - 25-04-2003
IIS தலைமையகத்தில் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
விண்ணப்ப முடிவுத் திகதி மேலும் நீடிக்கப்படமாட்டாது!
BIT பட்டப் படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே சிறந்த
பெறுபேறுகளைப் பெற்றுத்தருவது IIS நிறுவனம் மட்டுமே
"உங்கள் எதிர்காலத்தை மாற்றியமைக்கக்கூடிய இவ்வரிய
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்" (சி-855)
INSTITUTE OF INFORMATICS STUDIES
No. 100, Clock Tower Road, Jaffna.
Tel: 21 222 2831

## திங்களன்று நாகவிகாராதிபதியின் இறுதிச்சடங்கு

நயினாதீவு நாகவிகாரை பிரதம குரு வண. ராஜகீய பண்டித பிராமன வர்தே தம்மகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரர், தனது 92 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

இவரது பூதவுடல் இன்றும் நாளையும் நயினாதீவு நாகவிகாரையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, திங்களன்று இறுதிக் கிரியைகள் விகாரையில் நடைபெறும்.

நீண்டகாலமாக நயினாதீவில் வசித்து வந்த தேரர், மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (09)

## சடலம் ஒப்படைப்பு

பளை வைத்தியசாலையிலிருந்து, அம்புலன்ஸ் வண்டியில் கொண்டுவரப்பட்ட சடலம் ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சடலத்தோடு இரண்டு பயணப் பொதிகள், ஜேர்மன் நாட்டுக் சென்ற கடவுச் சீட்டு ஆகியனவும் 5910 ரூபா பணமும் காணப்பட்டன. இச்சடலத்துடன் இருந்த கடவுச்சீட்டில், இவர் பருத்தித்துறையைச் சேர்ந்த நடராஜா திருக்கேதீஸ்வரன் (வயது 43) என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (சு)

## மடுவீதியைத் திறக்க புலிகள் கோரிக்கை

மடுதேவாலயத்திற்குச் செல்லும் மடுவீதியை, சகல நாட்களிலும் திறந்துவைக்கும்படி சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமூடாக அரசுக்கு புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### கட்டைபறிச்சான் படை...

தில் மேலும் ஒருவர் பலியானார், 10 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 12 பேரின் நிலை ஆபத்தானதாகவுள்ளது.

இதேவேளை - மூதூர் வைத்தியசாலைக்குப் பின்னால் உள்ள தமிழ் வீடுகள் மீது முஸ்லிம் கும்பல் ஒன்று பெற்றோல் குண்டுகளை வீசியதில் அவை தீப்பற்றி எரிந்தன.

நிலைமை மோசமடைந்ததை அடுத்து நேற்று நண்பகல் 2 மணிக்கு மீண்டும் ஊரடங்கு அமுலானது. (04,10)

### கட்டைபறிச்சான்...

- மார்க்கண்டு சிவநேசன் - வயது 20, சேனையூர்.
- மகாலிங்கம் சின்னையா - வயது 23, சேனையூர்.
- சிவலிங்கம் - வயது 30, சேனையூர்.
- ராமையா நாகராசா - வயது 35, சந்தோசபுரம்.
- மா.ரதன் - வயது 20, சேனையூர்.
- ஆர்.வரதன் - வயது 20, சேனையூர்.
- வீ.ரவிச்சந்திரன் - வயது 18, சாலையூர்.
- சு.ரவிச்சந்திரன் - வயது 21, அம்மன்நகர்.
- ஆர்.சந்திரமோகன் - வயது 21, சம்பூர்.
- ரி.சந்திரமோகன் - வயது 30, சாலையூர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம் ஆகியோர், திருகோணமலை பொது வைத்தியசாலைக்குச் சென்று காயமடைந்தோரைப் பார்வையிட்டனர். (04, 10)

# புலிகள் தம் கடற்பிரிவை அங்கீகரிக்கக் கோரிக்கை!

## 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' கூறுகின்றது

விடுதலைப் புலிகள் - தமது கடற்புலிகளை, இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஊடாக முன்வைத்திருப்பதாக, இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை விடுதலைப் புலிகள் கிளிநொச்சியில் சந்தித்து - கடற்பிரதேச மோதல்களைத் தவிர்ப்பது பற்றி உரையாடியபோதே, இந்தவிடயம் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசையினால் முன்வைக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்',

அத்தோடு - கடற்பிரதேசங்களில் இருதரப்பு எல்லைகளை வரையறுத்தல், தமது படகுகள், கப்பல்கள் மீதான தாக்குதல்களைத் தவிர்த்தல் பற்றிய கோரிக்கைகளையும் கண்காணிப்புக்குழுவுக்கு புலிகள் சமர்ப்பித்ததாகத் தெரிவித்துள்ளது.

# வேகமாகச்செல்லும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

## கிளிநொச்சியில் காவல்துறை அறிவிப்பு

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் ஏ-9 வீதியில் வேக நடைமுறைகளைக் கடைப்பிடிக்காத வாகனச் சாரதிகள் மீது, தமிழீழ காவல்துறையினர் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

நேற்று முதல், கிளிநொச்சி நகர் பகுதிகளில் வேகக் கட்டுப்பாடு சீரான முறையில் இருக்கவேண்டும் என்றும், 30 K.M வேக நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் எனவும், இந் நடவடிக்கைகளுக்குக் கட்டுப்படாத வாகனச் சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை - அண்மைக்காலமாக இப்பகுதியில் பல விபத்துக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (லி)

# விளக்குடன் விளையாடிய பாலகனுக்கு எரிகாயம்!

மண்ணெண்ணெய் விளக்கு தட்டுப்பட்டு பற்றிய தீயினால் படுகாயமடைந்த நிலையில், 3 வயதுப் பாலகன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் - முகத்தில் எரிகாயமடைந்த நிலையில், பிரபாகரன் இசைப்பிரியன் என்னும் சிறுவனே கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான்.

படுத்திருந்த சிறுவனது தலைக்கருகே, அவனது சகோதரி விளக்கினை வைத்ததாகவும், அதனை எடுத்து சிறுவன் விளையாட முற்பட்டபோதே அது தட்டுண்டு எரிகாயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### மூதூர் சம்பவம்...

எனினும் - பின்னர் பொலிஸாரின் உதவியுடன் கண்காணிப்புக் குழுவினர் தமது அலுவலகம் சென்றனர்.

அசம்பாவிதங்கள் குறித்த கலந்துரையாடல் ஒன்றினை, கண்காணிப்புக் குழுவினருடன் திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் மேற்கொண்டார். (04)

## நாட்டுப்பற்றாளர் நினைவுக்கல் திறப்பு

(அம்பாறை)

அம்பாறை - காஞ்சிரங்குடாவில், விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பொது மக்களின் நினைவாக, நாட்டுப் பற்றாளர் நினைவுத்தூபி இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இத் திறப்பு விழா நிகழ்வு, மாலை 4.30 மணிக்கு இடம்பெறவிருக்கின்றது.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் இராசையா கதிர்காமநாதன்
ஆசைக்கு ஒரு மகனாய் -
அன்புக் கணவனாய் -
பாசமுள்ள அப்பாவாய் -
ஆசைக்கு ஒரு தம்பியாய் -
அருமைக்கு ஒரு மாமாவாய் -
ஊருக்கு தம்பியாய், அண்ணையாய் -
இருந்து எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகம் சென்றதேனோ?
மலர்வு - 06.07.1956
உதிர்வு - 20.03.2003
- குடும்பத்தினர்.
தகவல்:
(க.கஜேந்திரன் - மருமகன்) இலகடி, கோப்பாய் வடக்கு.
(சி-857)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.